விஷமுறிவு பூச்சிக்கடி வைத்தியம்

யமுனா பிரசுரம்

விஷமுறிவு பூச்சிக்கடி வைத்தியம்

ஆபஸ்தம்பன்

18/1, ராஜாபாதர் தெரு,
தியாகராயநகர்,
சென்னை 600 017
தொலைபேசி : 8241865

முதற் பதிப்பு : ஏப்ரல், 1990
இரண்டாம் பதிப்பு : ஏப்ரல், 1994
மூன்றாம் பதிப்பு : மே, 1998

மு.செல்வராசன் தயாரிப்பு

விலை ரூ. 15-00

அச்சிட்டோர் :
வைகறை அச்சகம்,
22, வடுகு இடையர் தெரு,
மயிலாப்பூர், சென்னை-4.

விஷ முறிவு பூச்சிக்கடி வைத்தியம்

விஷம் அல்லது நஞ்சு என்றால் பொதுவாக நம்மில் பலர் பூச்சிகள், வண்டுகள், பல்லி, ஓணான், நாய், பாம்பு, தேள், நட்டுவக்காலி இவைகளால் ஏற்படும் கொடிய விஷத்தையே குறிப்பிடுவார்கள்.

"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்" என்பதற்கிணங்க நாம் உண்ணும் உணவுப் பொருள்கள் கூட சற்று அளவுக்கு மிஞ்சிவிட்டால் நஞ்சாகி, நமது உயிரையே குடித்துவிடும்.

கொடிய விஷப் பற்களையுடைய பிராணிகளின் விஷத்தை விடவும் இயற்கையாக உள்ள செடி கொடிகளில் எவற்றில் விஷமுள்ளது என்று பார்த்து அதை உண்டு தமது வாழ்வை அழிக்க எண்ணி, முனைந்து செயலில் இறங்கிவிட்டு, பின்னர் தத்தளிப்பார்கள். இத்தகைய விஷத்தை முறித்துக் குணப்படுத்தும் வழிமுறைகள் உண்டு.

விஷப் பொருட்கள் என்று தெரியாமல், விஷமுள்ள காய்கள் என்று உணர்ந்து கொள்ளாமல் சிறுவர்கள் எதையாவது உண்டுவிட்டுத் துன்பப் படுவதையும் நாம் காணுகிறோம்.

அவசர புத்தியின் காரணத்தால் நிதானம் இழந்து எதையாவது தின்று உயிரை விட்டு

விட்டால் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்று எண்ணி வெறுக்கத்தக்க விஷப் பொருட்களை உண்டு, பின்னர் 'ஏன் உண்டோம்' என்று தத்தளித்தவர்கள் ஏராளம்.

சர்வ சாதாரணமாக உலவிவரும் 'இடு மருந்து' என்ற கொடிய விஷத்திற்கு ஆளாகி நாளுக்குநாள் உடல் மெலிந்து குணப்படுத்த முடியாத நிலையில் உள்ளவர்களையும் இயற்கை மருந்துகளால் குணபடுத்த முடியும்.

கண்ட கண்ட மருந்துகளை வாங்கியுண்டு இரத்தத்தை நஞ்சாக்கித் துன்பப்படும் அவல நிலையிலிருந்து மீட்சியுறவும் வழியுண்டு.

கொடிய நச்சுப் பொருள்கள் எந்த ரூபத்தில் இருந்தாலும் அதனைப் போக்கத்தக்க மருந்துண்டு. அதற்கான வழிமுறைகளைப் பார்ப்போம்.

விஷங்களும் மருந்துகளும்

சில பொருட்கள் விஷம் என்று தெரிந்தே உண்ணப்படுகின்றன. ஆனால் சில பொருட்களை விஷம் என்று தெரியாமல் உண்டு அவதிப்படுகிறார்கள். அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

உதாரணமாக புகையிலையை எடுத்துக் கொள்ளுவோம். இது விஷப் பொருளாகும். வெற்றிலைப்பாக்குப் போடுபவர்கள் புகையிலையை நிறைய அளவில் உபயோகிக்கிறார்கள்..

இந்தப் புகையிலைச் சாறு நமது உடலுக்குச் சோர்வை உண்டுபண்ணும் என்பதையும் பல்வேறு குடல் நோய்களுக்குக் காரணமாக அமையும் என்பதையும் அறியவேண்டும். புகையிலையைச் சாதாரணமாக உபயோகித்து வருபவர்கள் திடீரென்று புகையிலையின் அளவைச் சிறிது கூட்டினால் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு அபாயகரமான நிலைக்கு ஆளாக்கிவிடும்.

அகத்திக் கீரை, பெரிய குறிஞ்சான் இலை, மிளகு இவை மூன்றையும் நன்கு தட்டிப்போட்டு மண் பாத்திரத்தில் கஷாயமிட்டு இரண்டு வேளை கொடுத்தால், புகையிலையின் விஷத்தை முறித்துக் குணப்படுத்தும்.

சாராயம் குடிப்பதைச் சிலர் வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். இது அளவுக்கு அதிகமாகி விட்டால் உயிருக்கு ஆபத்தை உண்டு பண்ணும். இவ்விதம் அதிக அளவில் சாராயத்தைக் குடித்து விட்டால் முதல் அறிகுறியாக வயிற்றுப் போக்கு ஆரம்பிக்கும். நேரம் ஆக ஆக வயிற்றுப் போக்கு அதிகரித்து உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும்.

முள்ளங்கியின் சாற்றை எடுத்து இதனுடன் படிகாரத்தை நன்கு பொடித்துக் கலக்கிக் கொடுத்தால் குணம் கிடைக்கும்.

அளவுக்கு மீறி உணவு உட்கொள்வதும் விஷமாகும். மூக்குப் பிடிக்க உணவை உண்டு

விட்டு மூச்சித் திணறி இறந்திருக்கிறார்கள் சிலர் என்பதை அறிய உண்மையில் ஆச்சரியமே.

இவ்விதம் பேருண்டி உண்பவர்களுக்கு வயிறு உப்பிவிடும். ஜன்னியும் ஏற்படலாம். இத்தகைய வர்களுக்கு இஞ்சிச் சாற்றைக் கொடுத்தால் அபாயம் தீரும்.

இதைப் போன்று உணவில் அதிகப்படியாக உப்பு சேர்த்து உண்பார்கள். உப்பின் நச்சுத் தன்மையை இவர்கள் அறியாத காரணத்தால் இவ்விதம் உண்பார்கள். இவர்களுக்கு இருதயம் சரிவர வேலை செய்யாது. மூச்சுத் திணறல் ஏற்படும்.

அதிக அளவு உப்பை உணவில் சேர்த்துஉண்டு விட்டால் உடனே நன்கு புளித்த தயிரையோ மோரையோ குடித்தால் உடனடி குணம் கிடைக் கும்.

கஞ்சாவை உட்கொண்டால் ஒருவித மயக் கத்தை தரும் என்பதை அறிவோம். இவர்களுக்குத் தேவையற்ற எண்ணங்கள் ஏற்படும். இவர்களுக்குச் சரிவரத் தூக்கம் வராது. இவர்களால் சரிவர உண்ணவும் முடியாது. உடல் நலம் பெரிதும் குன்றும். கண்கள் சிவப்பேறிக் காணப்படும். மலம் சரிவரக் கழியாமல் வயிற்றில் வலி ஏற்படும். இவையனைத்தும் கஞ்சாவின் அளவு மீறியத் தன்மையே காரணமாகும்.

இதற்குச் சுக்குக் கஷாயம் இட்டுப் பருகினால் குணம் கிடைக்கும். ஒருவேளை கஞ்சாவின் அளவு மிகவும் அதிகமானால் எலுமிச்சப்பழ ரசத்தைக் கொடுத்தால் குணம் கிடைக்கும். வாழப்பட்டையின் சாறும் கஞ்சாவின் விஷத்தை முறித்துக் குணப்படுத்தும் ஆற்றல்கொண்டதாகும்.

உணவுப் பொருட்களிலுள்ள விஷத்தை முறிக்க

நாம் உண்ணும் உணவுப் பொருட்களின் மூலமும் நமது உடம்பில் விஷம் ஏறுகின்றது. இந்த விஷமானது நாளடைவில் நம்மைக் கொல்லாமல் கொன்று விடுகின்றது. இவ்விதம் சேருகின்ற விஷத்தை உடனுக்குடன் அகற்றுவதற்குத்தான் நாம் சமைக்கும் பதார்த்தங்களில் மஞ்சளை உபயோகப் படுத்துகிறோம். பதார்த்தங்களுக்கு அரைக்கின்ற போது சிறிதளவு அறுகம்புல்லையும் வைத்துத் தினந்தோறும் அரைத்துச் சேர்த்து வந்தால் இதன் சாறானது நமக்கு பல நன்மைகளை அளிக்கும். பல நோய்களிலிருந்தும் காப்பாற்றும். குறிப்பாக உணவுப் பொருட்களின் மூலம் ஏற்படும் விஷத்தை முறித்துவிடும்.

நாம் குடிக்க உபயோகிக்கும் தண்ணீரில் சீரகத்தை இட்டுக் கொதிக்க வைத்துக் குடித்தால் மிகவும் நல்லதாகும்.

பாகற்காய்க்கும் உணவு மூலம் ஏற்படும் விஷத்தை முறிக்கும் சக்தியுண்டு. பாகற்காய்

அவித்த நீரை வெளியே கொட்டாமல் கூட்டு வைத்தால் இந்த நீரானது உணவுப் பொருட்களின் மூலம் ஏற்படும் விஷத்தை முறித்துவிடும்.

பலவிதமான விஷங்களுக்கு

சிலர் அவசர புத்தியினால் எதையாவது செய்து விடுவார்கள். சிறு பிரச்சினைகளையும் சமாளிக்க முடியாமல் தற்கொலை முயற்சிகளில் இறங்குவார்கள்.

அரளி வேர், காசி அரளிக்காய் இவைகளை யெல்லாம் சர்வசாதாரணமாகப் பயன்படுத்தித் தற்கொலை முயற்சியில் இறங்கி, பின் உயிர் போவது வரைச் சித்திரவதைப் படுவார்கள். ஏதோ ஒரு வேகத்தில் குடித்துவிட்டுப் பின்னர் சொல்ல முடியாமல் தவித்து அணு அணுவாகச் சாவார்கள். இத்தகையவர்களுக்கு நீலி இலை நல்ல மருந்தாகப் பயன்படுகின்றது. இந்த நீலி இலை எல்லா இடங்களிலும் காணப்படுகின்றது. இது பார்ப்பதற்கு முருங்கை இலையின் தோற்றம் கொண்டதாகும்.

நீலி இலையை வேருடன் சேர்த்து நன்கு அரைத்துத் தண்ணீர் விட்டுக் கலக்கிப் புகட்டி விட்டால் விஷத்தை முறித்துவிடும்.

மஞ்சளை அரைக்துத் தண்ணீரில் கலக்கிச் சிறிது தெளியவைத்து அருந்தினாலும் விஷத்தை முறித்துக் குணத்தைத் தரும்.

சிறுவர்கள் அறியாமலுண்ணும் விஷத்தை முறிக்க

சிறுவர்கள் விளையாட்டுத்தனமாக எதையாவது உண்டு விடுவார்கள். விஷம் என்று அறியாமல் சில காய்களையும் விதைகளையும் உண்டு துன்பப் படுவர்ர்கள். இவ்விதம் உண்ணப்படும் விஷத்தை முறிப்பதற்குக் கீழ்க்கண்ட மருந்து பயன்படும்.

விளையாட்டில் ஈடுபடும் சிறுவர்கள் சிலசமயம் ஊர்ந்து செல்லும் அட்டைகளைப் பிடித்துத் தின்று விடுவார்கள். இவ்விதம் அட்டைகளை தின்று விட்டால் முதலில் வாய்ப் பாகம்தான் பாதிக்கும். பிறகு நாக்கு வெந்து போகும்.

உடனே தேய்த்துக் குளிக்கும் மஞ்சளைப் பொடி செய்து அவுரி வேர், அமுக்கராம் கிழங்கு, மிளகு இவைகளையும் பொடித்துச் சேர்த்து மண் பானையில் கஷாயமிட்டு மூன்று தினங்கள் ஆறு வேளை வீதம் கொடுக்கக் குணம் கிடைக்கும்.

கடலாமணக்கு விதைகளைச் சிறுவர்கள் தெரியாமல் உண்டு விட்டால் வாந்தியும், பேதியுமாகி இதனால் சிறுவர்கள் மிகவும் துன்பப்படுவார்கள். இந்த விஷத்தை முறிப்பதற்கு எருமை மோரை குடிக்கச் செய்யவேண்டும். இதற்கும் குணம் கிடைக்காவிட்டால் வசம்பை நெருப்பிலிட்டுச் சுட்டு இந்தக் கரியைப் பொடித்துத் தேனில் குழைத்துக் கொடுக்க வேண்டும்.

சில குழந்தைகள் சேங்கொட்டைப் பருப்பைத் தின்று விடுவார்கள். இது குடலைப் புண்ணாக்கி விடும். சேங்கொட்டையைப் பிள்ளைகள் தின்றால் உடனே நல்லெண்ணெய்யில் புளியைக் கரைத்துப் புகட்டி விடவேண்டும். விரைவில் விஷத்தை முறித்துக் குணப்படுத்தும்.

சில குழந்தைகள் ரசகற்பூரத்தைத் தின்று விடுவார்கள். துளசிச் சாற்றைக் கொடுக்க விஷம் முறிந்து குணம் கிடைக்கும். நாட்டு மருந்துக் கடையில் கிடைக்கும் சாரணை வேரை நன்கு பொடி செய்து துளசிச் சாற்றுடன் கலந்து கொடுக்க குணம் கிடைக்கும். இவற்றுடன் விளக்கெண்ணெய்யையும் கலந்து கொடுப்பது நலமாகும்.

சுண்ணாம்பைச் சில குழந்தைகள் தின்று விடுவார்கள். வாய்ப் பாகம் மட்டுமின்றி குடலும் வெந்து போகும். இந்த விஷத்தை முறித்துக் குணப்படுத்துவதற்கு நல்ல சுத்தமான கறி மஞ்சளை அரைத்துத் தேங்காய்ப் பாலில் கலக்கி மூன்று தினங்கள் ஆறு வேளை விதம் கொடுத்துவர விஷம் முறியும். நன்கு குணமாகும்.

இடுமருந்து விஷம் முறிய

என்னதான் விஞ்ஞானம் வளர்ந்தாலும், அறிவு பெற்றவர்கள் பெருகி வந்தாலும் பிறரை வசியம் செய்து தமது எண்ணம்போல் அவர்களை நடத்த எண்ணும் ஆசை மட்டும் போகவே போகாது.

கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் மட்டுமின்றி, உறவினர்களிடையேயும் இந்த இடுமருந்து இட்டு வசியம் செய்யும் முயற்சிகள் இப்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த இடுமருந்தை தயார் செய்து கொடுத்து பணம் பெறும் வைத்தியர்களும் ஏராளமாக உள்ளார்கள். இந்த இடுமருந்தை உட்கொள்ளுபவர்கள் நிரந்தர நோயாளியாகிச் சொல்லமுடியாத துன்பத்திற்கு ஆளாவார்கள். இந்த இடுமருந்தை எடுக்காவிட்டால் அல்லது இந்த விஷத்தை முறிக்காவிட்டால் விரைவில் அவர்கள் இறக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

இந்த இடுமருந்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த மருந்தை வெளியே எடுக்காமல் வேறு என்ன ஆங்கில மருத்துவம் செய்தாலும் பயனற்றுப் போய்விடும்.

மருந்து இடப்பட்டவர்களை முதலில் சோதனை செய்ய வேண்டும். மிதிப்பாகல் கொடியின் இலையைப் பறித்து நன்கு கசக்கி இதன் சாற்றை மருந்து இடப்பட்டவர்களின் உள்ளங்கையில் ஊற்றினால் உடன் உறைந்து போகும். இந்த முறையில் மருந்திட்டுள்ள முறையைக் கண்டறியலாம்.

இந்த இடுமருநது என்னும் விஷத்தை முறிப்பதற்கு முருங்கைக் கீரையைச் சிறிது தண்ணீர் விட்டு நன்கு இடித்துச் சாறு எடுக்க வேண்டும். நன்கு முற்றிய தேங்காயின் பாலைப்

பிழிந்து இந்தப் பாலை முருங்கைக்கீரைச் சாற்றுடன் நன்கு கலந்து ஒரு வேளைக்கு ஒரு அவுன்ஸ் என்ற கணக்கில் ஒரு நாளைக்கு மூன்று வேலை விதம் இரண்டு தினங்களுக்குக் கொடுக்க வேண்டும். இவ்விதம் கொடுத்தால் இடுமருந்து விஷம் முறிந்துவிடும்.

கோழி இறைச்சியை எலும்புகளுடன் சேர்த்து நன்கு துண்டுகளாக நறுக்கி இதனுடன் முருங்கைக் கீரையையும் சேர்த்து சூப் தயார் செய்ய வேண்டும். இந்தச் சூப்பை இரண்டு அவுன்ஸ் வீதம் ஒரு நாளைக்கு மூன்று வேளை கொடுத்து வந்தால் விஷத்தை முறித்து விடலாம். நிச்சயம் குணம் கிடைக்கும்.

முதலில் சொன்ன மருந்தையோ அல்லது இரண்டாவது குறிப்பிட்ட மருந்தையோ தொடர்ந்து இரண்டு தினங்களுக்கு உட்கொள்ள வேண்டும். மூன்றாவது நாள் முருங்கைக்கீரையின் சாற்றைப் பிழிந்து இந்தச் சாற்றில் ஏதேனும் ஒரு பேதி மருந்தைக் கலந்து கொடுத்தால் மலமுடன் இந்த இடுமருந்து வெளியேறிவிடும். ஒருவேளை மலமுடன் வெளியேறாமலிருந்தால் வாந்தி மூலம் வெளியேறி விடும்.

இவ்விதம் வெளியேறிவிட்ட பின்னர் அதி மதுரத்தை நன்கு பொடித்துச் சிறிது தண்ணீர் ஊற்றி கஷாயமிட்டு சிறிதளவு பருக வேண்டும்.

மருந்து வெளியேறவில்லை என்ற சந்தேகம் ஏற்பட்டால் தொடர்ந்து பேதி மருந்து அருந்தக்

கூடாது. குறைந்தது ஒரு மாதம் கழித்துத்தான் பேதிக்குச் சாப்பிட வேண்டும்.

இந்த எளிய மருந்தின் மூலம் இடு மருந்தினால் ஏற்படும் விஷத்தை முறித்துக் குணப்படுத்தி விடலாம்.

அறியாமல் உண்ணும் விஷத்தை முறிக்க

தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்ற உணர்வு சிலருக்குத் திடீரென்று ஏற்பட்டு அதனைச் செயல்படுத்தி விடுகின்றனர். இவ் விதம் உண்ணக் கூடாததை உண்டுவிட்டுப் பின்னர் அவதிப்படுவார்கள். அவசரப்பட்டு செய்து விட்டதை எண்ணி சொல்லவும் முடியாமல் மெல்ல, வும் முடியாமல் திணறிப் போவார்கள். இவ்வாறு ஆத்திர புத்தியினால் செயல்படுபவர்களை எவ் வாறு குணப்படுத்தலாம் என்பதைப் பார்ப்போம்.

நல்லெண்ணெயுடன் தயிரையும் அபினையும் சேர்த்துக் குடித்துத் தற்கொலைக்கு முயல்பவர் களை காப்பாற்றி விடலாம். இவ்விதம் குடித்தவர் களுக்கு காலம் கடத்தாமல் பசுவின் நெய்யில் படிகாரத்தைப் பொரித்துக் கொடுத்து விட்டால் விஷம் முறிந்து குணமாகும்.

கள்ளிப் பால் விஷத்தை முறிக்க

கள்ளிப் பாலைக் குடித்து விட்டால் குடல் வெந்து இறந்து போகலாம் என்ற எண்ணம்

கொண்டு சில அவசர புத்திக்காரர்கள் அதனைக் குடித்துவிட்டுப் பின்னர் சித்திரவதைப்படுவார்கள். இவர்களுக்கு வாழை மர பட்டையின் சாற்றை உள்ளுக்குக் கொடுத்து விடவேண்டும். நன்கு முற்றிய பட்டைகளை அகற்றி விட்டு முற்றாத பட்டைகளையும் தண்டையும் குறுகத் தறித்துக் கல்லுரலில் இட்டு நன்கு இடித்துப் பிழிந்து வடிக்கட்டி குறைந்தது நூறு மில்லியளவு உள்ளுக் குக் கொடுக்கக் குணம் கிடைக்கும்.

நல்ல சுத்தமான புதிய தேங்காய் எண் ணெய்யை—அதாவது அப்போதுதான் அரைத் தெடுத்த தேங்காய் எண்ணெய்யைச் சிறிதளவு கொடுத்துக் குடிக்கச் செய்தால் குணம் கிடைக்கும். தேங்காய் எண்ணெய்யானது கள்ளிப்பாலை அருந்தியதால் உண்டான வாய்ப் புண்ணையும், வயிற்றுப் புண்ணையும் விரைவில் குணப்படுத்தும் ஆற்றல் பெற்றதாகும்.

அருகம்புல், மிளகு, வெற்றிலை இவைகள் அனைத்தையும் எடுத்து நன்கு சிதைத்து கஷாய மிட்டு வைத்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகக் குடிக்கச் செய்தால் குணம் கிடைக்கும்.

ஆவார இலையை நன்கு வேகவைத்து கஷாய மாக வடித்து எடுத்து இதனுடன் கடுக்காய் தூளைக் கலந்து குடிக்கச் செய்தால் விஷத்தை முறித்துவிடும்.

எருக்கம் பால் விஷத்தை முறிக்க

கள்ளிப் பாலைக் குடித்தவர்களைப் போல எருக்கம் பாலைக் குடித்துத் தற்கொலை செய்ய முயற்சிப்பவர்களும் உண்டு இவ்விதம் அறியாமை யின் காரணத்தால் குடித்துவிட்டு அல்லல்படுபவர் களுக்கு பசும் பாலில் கோழி முட்டையின் வெள்ளைக் கருவை நன்கு கலக்கிக் கொடுக்கக் குணமாகும். இந்த மருந்தை தினமும் இரண்டு வேளை வீதம் மூன்று தினங்களுக்கு உட்கொள்ள வேண்டும். பூரண குணம் கிடைக்கும்.

கருவேலம்பட்டையை நன்கு சிதைத்து கஷாய மிட வேண்டும். இந்த கஷாயமுடன் மோரையும், நெய்யையும் கலந்து குடிக்கச் செய்தால் குணம் கிடைக்கும்.

சோற்றுக் கற்றாழையின் மேல்த் தோலைப் போக்கித் துண்டு துண்டாக அரிந்து இதனுடன் விளக்கெண்ணெய்யைக் கலந்து கொடுத்தாலும் குணம் கிடைக்கும்.

விளக்கெண்ணெய் கிடைக்காவிட்டால் பச்சை மஞ்சளை நன்கு அரைத்துக் கலந்து கொடுக்க குணம் கிடைக்கும்.

தில்லைப் பாலின் விஷத்தை முறிக்க

கள்ளிப் பாலைப் போன்று தில்லைப் பாலை யும் குடித்தால் உயிருக்கு ஆபத்துதான். இதைப் போக்க கோவை இலை, காய் இவைகளையும்

விளக்கெண்ணெய், எருமை கோமியம் இவைகள் அனைத்தையும் நன்கு கலந்து அரைத்துக் குடிக்கச் செய்தால் விஷத்தை முறித்துவிடும்.

பாக்கு ஊறிய தண்ணீரில்—அதாவது களிப் பாக்கு ஊறிய தண்ணீரில் பனைவெல்லத்தைக் கலந்து கொடுக்க குணம் கிடைக்கும். அல்லது இதனுடன் சிறிதளவு சிறுதும்பைச் செடியின் சாற்றையும் கலந்து கொடுத்தால் நிச்சயம் குணம் கிடைக்கும்.

எட்டி விதையும் நல்லெண்ணெயும் கலந்த விஷத்தை முறிக்க

தற்கொலை செய்து கொள்வதற்கு வசதியாக எத்தனை எத்தனையோ விஷப் பொருட்கள். அவற்றில் இதுவும் ஒன்றாகும். இவ்விதம் எட்டி விதையை அரைத்து நல்லெண்ணெயில் கலக்கிக் குடித்தால் உடனே சில கோளாறுகளைச் செய்ய ஆரம்பிக்கும். நிறைய அளவில் வியர்வை வெளி யாகும். வாந்தி வருவது போன்று இருக்கும். ஆனால் வராது. கண்கள் சிவப்பு ஏறும். வயிற்று வலியால் துடிதுடிப்பார்கள். எழுந்து நடமாட முடியாத நிலைமை ஏற்படும்.

கோழி முட்டையின் வெள்ளைக் கருவைத் தனியே எடுத்து இதில் பசுவின் நெய்யையும் பசுவின் பாலையும் நன்கு கலந்து கொடுத்து விட்டால் குணம் கிடைக்கும். ஒரு வேளை பசுவின் நெய் கிடைக்காவிட்டால் எருமை

நெய்யில் எருக்கம் பாலைக் கலந்து முட்டையின் வெள்ளைக் கருவைக் கலக்கி கொடுத்துவிட்டால் குணம் கிடைக்கும்.

குன்றிமணி விஷத்தை முறிக்க

குன்றிமணி விதைகளைச் சிறுவர்கள் விளையாட்டாகத் தின்று விடுவார்கள். இது விஷப் பொருளாகும். இதனால் வயிற்றுப் போக்கு ஏற்படுவதுடன் விரைவில் நினைவு இழக்கச் செய்யும். கண்களின் விழிகள் பிதுங்குவது போன்ற உணர்வு ஏற்பட்டதும் கதறுவார்கள்.

படிகாரத்தை நன்கு பொரித்துப் பசுவின் பாலில் கலந்து இரண்டு வேளை பருகச் செய்தால் விஷம் முறியும்.

குன்றிமணி நல்லெண்ணெய் விஷத்தை முறிக்க

குன்றிமணி விதைகளை நன்கு பொடித்து நல்லெண்ணெய்யையும் கலந்துக் குடித்துத் தற்கொலை முயற்சியில் சிலர் ஈடுபடுவார்கள். இவ்விதம் குடித்த சிறிது நேரத்திற்குள் உடம்பு குளிர்ந்து கைகால்கள் சோர்வடைய ஆரம்பித்து விடும். மேல் மூச்சு வாங்க ஆரம்பிக்கும். முகத்தை ஒரு பக்கமாக இழுத்து கோணவைக்கும்.

இந்த விஷத்தை முறிப்பதற்கு பசு நெய்யுடன் சீனியைக் கலந்து கொடுத்துவிட வேண்டும். இவ்விதம் கொடுத்த சிறிது நேரத்திற்குள்ளாக

விஷத்தின் வேகம் குறைந்து குணம்' தெரிய ஆரம்பிக்கும்.

நல்லெண்ணெயுடன் வெற்றிலைச் சாறு விஷம் முறிக்க

நல்லெண்ணெய்யுடன் வெற்றிலையின் சாற்றைச் சேர்த்து வேண்டுமென்றே பருகுவார்கள். இது கொடிய விஷமாகும். இது உட்சென்றதும் உடலானது பதற ஆரம்பிக்கும்.

இந்த விஷத்தை முறிப்பதற்கு தேங்காய்ப் பாலைப் பிழிந்து இதனுடன் வெங்காயத்தைக் கலந்து அரைமணி நேரத்திற்குள் கொடுத்தால் தான் குணம் கிடைக்கும்.

ஊமத்தைச் சாறு—அபின் விஷம் முறிய

ஊமத்தைச் சாற்றுடன் அபின் கலந்து பருகினால் உடன் தலைச்சுற்றல் ஏற்பட்டு வாந்தி ஏற்படும். கைகால்கள் குளிர்ந்து போகும். உடம்பிலுள்ள உறுப்புகள் தம் நிலையை இழக்க ஆரம்பிக்கும். இதற்கு மாசிக்காயைப் பாலில் உரைத்துக் கொடுத்தால் குணம் கிடைக்கும். விரைவில் விஷத்தை முறிக்கும்.

அரளி வேரின் விஷம் முறிய

அரளி வேரை அரைத்து இதன் சாற்றைப் பருகினால் விரைவில் மரணம் ஏற்படும். தற்கொலை செய்ய முயலுபவர்கள் இதை உபயோகிப்

பார்கள். இந்தச் சாற்றைப் பருகிவிட்டவர்களைக் குணமாக்க உடன் நன்கு காய்ந்த நிலையிலுள்ள நாய் மலத்தைப் பொடித்து எருமை மோரில் கலந்து கொடுத்தால் குணமாகும்.

செங்கொட்டை விஷம் முறிக்க

செங்கொட்டையைப் பொடித்துத் தின்று விடுவார்கள். இது கொடிய விஷமாகும். இது வயிற்றின் உட்புறத்தைப் புண்ணாக்குவதுடன் குடலையும் அழித்துவிடும்.

புளியை நல்லெண்ணெய்யில் கரைத்து பருகி விட்டால் குணம் கிடைக்கும். விஷமும் முறிந்து போகும்.

எட்டி விதையின் விஷம் முறிய

எட்டி விதையைத் தின்றால் வாந்தி ஏற்பட்டுச் சோர்வு அடையச் செய்யும். விஷம் தலைக்கேறி நினைவு இழப்பார்கள். எதை எதையோ பேசுவார்கள்.

நாவல் மரப்பட்டையை நன்கு இடித்துத் தூளாக்கிப் பசுவின் பாலில் கலந்து கொடுக்கக் குணமாகும். முற்றிய நாவல் மரத்தின் பட்டை நல்ல குணத்தைத் தரும்.

கண்ணாடி ஓட்டினால் ஏற்படும் விஷம் முறிய

விஷம் நிறைந்த செடி கொடிகளையும் வேர்களையும் கொட்டைகளையும் உண்டு தற்கொலை

முயற்சியில் ஈடுபட்டு இந்த விஷத்தினால் சித்திர வதைப்படுகின்றபோது உண்மையில் தமது அறியாமைச் செயல்களால் பெரிதும் துன்பப்படுவார்கள்.

கண்ணாடிப் புட்டிகளை உடைத்து நொறுக்கிப் பொடியாக்கி உண்ணும் அறிவிலிகளும் உள்ளார்கள். கண்ணாடிப் பொடியானது வயிற்றினுள் சென்று உள்ளுறுப்புகளை அழித்து உயிரைப் போக்கிவிடும். மிகுந்த சித்திரவதைக் குள்ளாவார்கள்.

இவ்விதம் கண்ணாடிப் புட்டிகளை உடைத்து நொறுக்கி தின்றால் வயிற்றில் புண் ஏற்பட்டு விரைவில் துர்நாற்றம் வீச ஆரம்பிக்கும்.

இஞ்சிச் சாற்றுடன் அதிமதுரம், மாசிக்காய் இவைகளை நன்கு அரைத்துக் கலக்கிக் குடிக்கச் செய்தால் விஷம் முறிந்து குணம் கிடைக்கும். வயிற்றுப் புண்ணை ஆற்றுவதற்கு அதிமதுரம் நல்ல மருந்தாகும். இஞ்சிச் சாறும், மாசிக்காயும் விஷத்தை முறிக்கும் அற்புதச் சக்தி கொண்டவையாகும்.

எருமை மோரில் நாயின் மலத்தைக் கலக்கிக் கொடுத்தாலும் இந்த விஷத்தை முறித்து விடலாம். இது அருவருப்பாக இருந்தாலும் உயிர் பிழைப்பதற்கு வேறு வழியில்லை. இதைக் கொடுத்துத் தான் தீர வேண்டும்.

எல்லாவித விஷத்தையும் முறிக்க

அவசர புத்தியின் காரணத்தால் உட்கொண்ட எந்த விஷப் பொருட்களையும் முறித்துக் குணப் படுத்தும் ஆற்றலைப் பொன்னாங்கண்ணிக் கீரை, சிறுகீரை, கோவைக் கீரை, கடுக்காய்ப் பிஞ்சு இவைகள் பெற்றிருக்கின்றன. இவைகளைப் பசுவின் பாலில் அரைத்துக் கொடுத்தால் ஆச்சரியப் படும்படியாக குணம் கிடைக்கும். இவைகளில் சிறுகீரையானது எந்தக் கொடிய விஷத்தையும் முறித்து விரைவில் குணப்படுத்தும் அற்புதமான சக்தி படைத்தது.

பாகல் இலையை தண்ணீர் விட்டு நன்கு அரைத்துக் கலக்கிக் கொடுக்க விஷத்தை முறித்து விடும்.

எத்தகைய கொடிய விஷத்தையும் முறிப்பதற்கு நாயின் மலத்தைக் கரைத்துக் கொடுத்து விட்டால் போதுமானது. ஆனால் கடியுண்டவர் அறியக் கூடாது. வெந்நீரில் கடுக்காயை ஊறவைத்து இதில் நாயின் மலத்தைக் கரைத்துக் கொடுத்தால் விஷம் எத்தகையதாயினும் முறிந்துவிடும்.

எந்தக் கொடிய விஷப் பூச்சிகள் கடித்தாலும் நன்கு காய்ந்த சந்தனத்தைப் பொடித்துத் தயிரிலே குழைத்துக் கடிவாயிலும் சுற்றுப்புறத்திலும் பூசி விட்டால் விஷத்தை முறித்து விடும்.

வெள்ளைப் பாஷாண விஷத்தை முறிக்க

வெள்ளைப் பாஷாணம் என்பது கொடிய விஷமாகும். இதைத் தண்ணீர்விட்டு அரைத்து விஷப்பாம்பு கடித்த வாயில் பூசினால் உடன் விஷத்தை முறிக்கும். இதையும் சிலர் தின்று தற் கொலைக்கு முயற்சிப்பார்கள்.

அறியாமையின் காரணத்தால் இதைத் தின்றவர்கள் உயிர் பிழைப்பது அருமையிலும் அருமைதான் என்றாலும் இந்த விஷத்தையும் முறிக்க மருந்து உண்டு.

இந்த வெள்ளைப் பாஷாணம் உட்சென்றதுமே துடிதுடித்துப் போவார்கள். உடம்பானது நெருப்புப் பட்டது போன்று எரிய ஆரம்பிக்கும். வாந்தியும் பேதியும் ஏற்பட்டு வயிறு எரிய ஆரம் பிக்கும். கண்களின் பார்வை மங்கிப்பொகும்.

இந்தக் கொடிய விஷத்தை யாராவது அறி யாமையால் உட்கொண்டால் உடன் மூக்கறட்டை வேர், நீலிவேர், வெற்றிலை, மிளகு இவைகளை நன்கு சிதைத்து பழைய மண் பாத்திரத்தில் தண் ணீர் வைத்து இவைகளைக் கலந்து கஷாயம் தயார் பண்ண வேண்டும். நன்கு கொதித்தத் தண்ணீர் நான்கில் ஒரு பங்காக வற்றுவதுவரை அடுப்பை எரிய விட்டு இந்தக் கஷாயத்தை ஒரு நாளைக்கு மூன்று வேளை வீதம் மூன்று தினங்கள் கொடுத்து வரக் குணம் கிடைக்கும்.

பாகற்கொடியின் இலைகளைப் பறித்து வந்து சுத்தம்செய்து கல்லுரலில் இட்டு இடித்துப் பிழிந்து கொடுத்தாலும் இந்த வெள்ளைப் பாஷாணத்தின் விஷத்தை முறித்துக் குணப்படுத்தலாம்.

மருந்துகளால் ஏற்படும் விஷம் முறிய

டாக்டர்கள் கொடுக்கும் மருந்துகளையும் மாத்திரைகளையும் கண்ணை மூடிக்கொண்டு சிலர் உட்கொள்ளுகின்றனர். மருந்து தேவையா, மாத்திரை தேவையா என்று எண்ணிக் கூடப் பார்க்கமாட்டார்கள். தலைவலியா—மாத்திரை; மூக்கடைப்பா— மாத்திரை—மருந்து. சிறிதளவு காய்ச்சல் வந்தாலும் மருந்து மாத்திரை என்று உட்கொண்டு நமது உடம்பை நாமே விஷமாக்கிக் கொள்ளுகிறோம். இவ்விதம் எடுத்ததற்கெல்லாம் மருந்து—மாத்திரை என்று உட்கொள்ளுவதால் முதலில் வாய்ப் புண் ஏற்படுகிறது.

முதல் அறிகுறியாக வாய்ப் புண் ஏற்பட்டதும் எதற்காக வாய்ப் புண் ஏற்பட்டது என்பதைச் சிந்திக்காமல் இந்த வாய்ப் புண்ணையும் குணப் படுத்த டாக்டர்களை நாடி ஓடுகின்றோம்.

நமது உடலை நல்ல பழக்க வழக்கங்களால் நோய் நொடியின்றி வைத்துக் கொள்ள முடியும் என்பதை நாம் மறந்து விடுகிறோம். நோய் ஏதா வது வந்தால் ஒரு பொழுதாவது பட்டினி இருந் தால் உடல் நலம் பெறும் என்பதையும் எண்ண

மறந்து விடுகிறோம். நமது பெரியோர்கள் எதற்காக விரதங்களை அனுஷ்டித்து வந்தார்கள்—வருகின்றார்கள் என்பதையும் மறந்து விடுகிறோம். நம்மைச் சுற்றிலுமுள்ள இயற்கை மருந்துகளையும் மறந்துவிடுகிறோம்.

அதிகப்படியான மருந்துகளின் காரணத்தால் நமது உடல் நஞ்சாகி விட்டால் என்ன செய்ய வேண்டும்? முதல் அறிகுறியாக வாய்ப் புண் ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்ப்போம். மிகவும் எளிய முறையில் குணப்படுத்தி விடலாம். சுரக்குடுக்கையை அடுப்பில் இட்டுச் சுட்டு எடுக்கவேணடும். பின்னர் இதன் கரியை நன்கு பொடித்துப் பசுவின் மோரில் கலக்கி மூன்று வேளை கொடுத்தால் விஷத்தை முறித்து குணம் ஏற்படும்.

எந்தக் கொடிய நோயையும் பட்டினி கிடந்து குணப்படுத்த முடியும். விரதங்களை நமது முன்னோர்கள் கைக்கொள்ளக் காரணமே இது தான். விரதங்கள் இருப்பதன் மூலம் மன அமைதியைப் பெறுவதுடன் உடலிலுள்ள விஷத்தையும் போக்கி விடலாம்.

தேனீயின் விஷத்தைப் போக்க

தேனீயானது மிகவும் கஷ்டப்பட்டுச் சேர்த்து வைக்கும் தேனை நாம் எடுக்கச் சென்றால் நம்மை விரட்டி விரட்டிக் கொட்ட வரும். தேன் கூட்டைக்

கலைப்பதற்காக—தேனை எடுப்பதற்காக அதன் அடியில் புகையைப் போடுகின்றபோது தேனீக்கள் பல பக்கங்களிலும் சிதறி பறக்கவும், ஆத்திரத்தில் கொட்டவும் செய்யும்.

ஒரு வேளை கொட்டி விட்டால் கொட்டிய இடத்திலுள்ள கொடுக்கை அப்புறப்படுத்தி விட்டால் கடுப்பு இருக்காது. தேனீ கொட்டியதும் அதன் கொடுக்கு முறிந்து நமது உடம்பில் தங்கி விடும். கொடுக்கிலிருந்து விஷம் வெளியேறி நமது இரத்தத்துடன் சேரும்போதுதான் கடுப்பு ஏற்படும்

மண்ணெண்ணெய் கொண்டு நன்கு தேய்த்து விட்டால் கடுப்புக் குறையும். எந்த விஷத்தையும் முறிக்கும் ஆற்றலுள்ள சின்ன வெங்காயத்தின் சாற்றை அருநதினால் விஷம் முறிந்து விடும்.

குப்பை மேனிச் செடியைப் பிடுங்கி இலை களைப் பிழிந்து சாற்றைக் கடிவாயில் தடவினால் விஷத்தை முறிக்கும்.

நாயுருவி இலையுடன் சின்ன வெங்கர்யத்தைச் சேர்த்து அரைத்துக் கடிவாயில் வைக்க விஷம் முறியும்.

மாதுளை இலையையோ அவுரி இலையையோ வாயிலிட்டு மென்றால் விஷம் முறிந்துவிடும்.

சிறுகுறிஞ்சான் இலையுடன் மிளகு வைத்து அரைத்துச் சுண்டைக்காயளவு காலையிலும்

மாலையிலும் சாப்பிட்டு வந்தால் தேனீயின் விஷம் மற்றும் எல்லாவிதமான விஷமும் முறிந்து விடும்.

பழைய புளியையும் சுண்ணாம்பையும் சேர்த்து நன்கு குழைத்துக் கொண்டிருந்தால் சற்றுச் சூடு வரும். இவ்விதம் நன்கு குழைத்துச் சூட்டோடு சூடாகக் கடிவாயில் வைத்தால் விஷம் முறியும்.

குளவியின் ஷஷத்தைப் போக்க

குளவிகளில் பல வகையுண்டு. வீட்டுப் பக்கங் களில பறந்து திரிகின்ற குளவிகள் கொட்டினால் விஷம் கிடையாது. ஆனால் காட்டுப்புறங்களி லுள்ள குளவிகள் கொட்டினால் விஷபாதிப்பு ஏற்படும்.

குளவி கொட்டியதும் உடன் சுண்ணாம்பைத் தடவி விடவேண்டும். இவ்விதம் தடவினால கடுப்பு வலியை நீக்கும். நாயுருவி இலைகளை நன்கு அரைத்து குளவி கொட்டிய இடத்தில் பூசினால் விஷத்தை முறித்து விடும்.

மஞ்சளை நன்கு வடிய அரைத்துச் சிறிது நல்லெண்ணெய்யைக் கலந்து நன்கு சூடாக்கிக் கடிவாயில் வைத்துக் கட்டினால் விஷத்தை முறிப் பதுடன் கடுப்பு வலியையும் குணப்படுத்தும்.

விஷத்தை முறிக்கும் அற்புதச் சக்தி படைத்த சின்ன வெங்காயத்துடன் மஞ்சள் சேர்த்து

அரைத்துக் கடிவாயில் பற்றிட்டாலும் குணம் கிடைக்கும்.

மண்ணெண்ணெய்க்குச் சாதாரண விஷத்தைப் போக்கும் குணம் உண்டு. ஒரு துணியை மண்ணெண்ணெயில் தோய்த்தெடுத்து கடிவாயில் தேய்த்துக் கொண்டிருக்கக் குணம் கிடைக்கும்.

குளவி கொட்டினதும் அதன் முள் நமது உடலில் இருக்கிறதா என்று பார்த்துக்கூர்மையான ஊசி கொண்டு அப்புறப்படுத்தி விடவேண்டும்.

எந்த விஷப்பூச்சி கடித்தாலும் உடன் கடிவாயின் மேல் கயிறு கொண்டு கட்டி இரத்தத்தைப் பிதுக்கி எடுத்து விடுவது நல்ல முதலுதவியாகும். எல்லா விஷங்களுக்கும் முறிவு மருந்தான சுத்தமான நல்லெண்ணெய்யை உள்ளங்கை நிறைய ஊற்றிக் குடித்துவிட வேண்டும்.

குப்பை மேனி இலையுடன் சுண்ணாம்பு சேர்த்து நனகு அரைத்துக் கடிவாயில் பூசினால் விஷம் முறிவதுடன் வீக்கமும் குறையும். நீலகிரித் தைலம் கிடைத்தால் தேய்த்து விடவேண்டும். இவ்விதம் அழுத்தித் தேய்க்கும் போது கடுப்பு வலி குறையும்.

பழம் புளியுடன் சுண்ணாம்பையும் சேர்த்து நன்கு குழைத்து புன்னை எண்ணெய் கிடைத்தால் கலந்து சூடாக்கிக் கடிவாயில் தேய்க்க, விஷம் முறிவதுடன் வலியும் குறைந்து வீக்கமும் வடியும்.

வண்டு கடிக்கு மருந்து

வண்டுகளில் எந்த வண்டு கடித்தாலும் உடன் மஞ்சளைச் சுட்டு அந்தப் புகையைக் கடிவாயில் காட்டிட வண்டு கடியால் ஏற்படும் வலி குறையும்.

மஞ்சளையும் சிறிதளவு பசுவின் சாணியையும் சேர்த்து அரைத்துச் சூடு பண்ணிக் கடிவாயில் சூட்டோடு சூடாகப் பூசி விட்டால் விஷம் இறங்கும்.

உப்பு, கடுகு, மஞ்சள் இவைகளை வைத்து நன்கு அரைத்து நீரில் கலக்கிச் சூடு செய்து கடிவாயில் இட்டால் விஷம் முறியும்.

வெள்ளறுகுப் பூண்டை வேருடன் எடுத்து நன்கு அரைத்துச் சாறு பிழிந்து சிறிதளவு கொடுத்தால் வாந்தி ஏற்படும். வண்டுகளில் சில கொடிய விஷமுள்ளவையானதினால் விஷத்தை வெளியேற்ற இது உதவும்..

நன்கு முற்றிய பூசணிக் கொடியை நன்கு வெய்யிலில் உலர்த்தி இடித்துத் தூளாக்கி எடுத்துக் கொண்டு காலையிலும், மாலையிலும் சிறிதளவு வாயில் இட்டு வெந்நீர் குடித்து வர வண்டு கடியின் விஷத்தை முறித்துவிடலாம். இவ்விதம் மூன்று தினங்கள்—ஆறு வேளை உட்கொள்ள விஷம் அறவே முறியும்.

சிறு சின்னி இலையையும் கையாந்தகரை இலையையும் நன்கு சுத்தம் செய்து இரண்டையும் சேர்த்து அரைத்து ஒரு நெல்லிக்காயளவு வாயி லிட்டு வெந்நீர் குடித்து வரவேண்டும். இவ்விதம் மூன்று தினங்கள் —ஆறு வேளை உட்கொண்டால் வண்டுகளின் கடியினால் ஏற்படும் எத்தகைய விஷத்தையும் முறித்து விடலாம்.

ஆடு தீண்டாப்பாளையின் இலையை நன்கு வெய்யிலில் உலர்த்தி இடித்துத் தூளாக்கிச் சிறிதளவு வென்னீரிலிட்டு மூன்று தினங்கள் காலை யிலும் மாலையிலுமாக ஆறுவேளை பருகிவர வண்டுக்கடியினால் ஏற்படும் விஷம் முறியும்.

நாகதாளி வேரை நன்கு சுத்தம் செய்து வெய்யிலில் உலர்த்திப் பின்னர் கல்லுரலில் இட்டு இடித்துத் தூள் செய்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு வேளைக்கும் ஏறக்குறைய பத்து கிராம் அளவு உட்கொண்டு பசுவின் பாலைப் பருகி வர வேண்டும். இவ்விதம் ஆறு தினங்கள் காலையிலும் மாலையிலுமாக உட்கொண்டு வந்தால் வண்டு களின் விஷம் எத்தகையதாக இருந்தாலும் முறிந்து விடும்.

வெற்றிலையுடன் மிளகையும் வைத்து மென்று விழுங்கினால் வண்டுக் கடியினால் ஏற்படும் விஷத்தை நீக்கலாம். இவ்விதம் மூன்று தினங் களுக்குக் மாலையிலும் வாலையிலும் செய்ய வேண்டும்.

ஏறக்குறைய அழாக்கு வெள்ளாட்டுப் பாலுடன் அதே அளவு புளித்த பசுவின் மோரைக் கலந்து காலையில் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். இவ்விதம் மூன்று தினங்கள் குடித்து வந்தால் வண்டு கடியினால் ஏற்படும் விஷத்தை முற்றிலும் நீக்கிவிடலாம்.

சிறுகுரிஞ்சான் இலையுடன் மிளகு வைத்து நன்கு அரைத்து உருட்டித் தினமும் காலையிலும் மாலையிலுமாக ஒரு நெல்லிக்காயளவு ஒரு வாரத்திற்குச் சாப்பிடவேண்டும். இந்த மருந்தை உண்ணும் நாட்களில் உப்பு, புளி, கடுகு இவைகளைக் கண்டிப்பாக உணவில் சேர்க்கக்கூடாது.

சிறுகீரையை மிளகு சேர்த்துக் கஷாயம் வைத்துச் சாப்பிட்டால் வண்டு கடியினால் ஏற்படும் விஷத்தை முறித்துக் குணப்படுத்தி விடலாம்.

சிலந்தி கடிக்கு மருந்து

எட்டுக்கால் பூச்சி என்று சொல்லக்கூடிய சிலந்தி கடித்துவிட்டால் தேகமெங்கும் ஒருவிதக் கொப்புளங்கள் தோன்றும். முதலில் சிறுசிறு சிரங்கு போன்று ஆரம்பித்துப் பின்னர் கொப்புளம் பெரியதாகும்.

சில சமயங்களில் இந்தப் பூச்சி பீச்சுகின்ற விஷ நீரானது ஒரு விதமான நமைச்சலை உண்டு

பண்ணி பின்பு புண்ணாகி விடும். சிலந்திப் பூச்சி தான் கடித்துள்ளது என்று தெரிந்தால் உடன் கைக்கு இரண்டு கை சின்ன வெங்காயத்தை நன்கு உரித்து இடித்துச் சாறு பிழிந்து கொடுத்து விட வேண்டும.

வெற்றிலையுடன் மிளகு வைத்துத் தின்றாலும் சிலந்திப் பூச்சியின் விஷத்தை முறித்து விடும். அறுகம்புல்லின் வேர், குப்பை மேனி இலை, சிறு துண்டு கறி மஞ்சள் இவைகளைச் சேர்த்து நன்கு அரைத்து ஒரு நெல்லிக்காயளவு உட்கொண்டு நீராகாரம் பருகினாலும் விஷத்தை முறித்துவிடும்.

நாயுருவி இலையானது பூச்சி கடிகளின் விஷத்தைப் போக்கும் அபூர்வ சக்தி படைத்தது. இந்த இலைகளைப் பறித்து இதனுடன் சிறு துண்டு சுத்தமான மஞ்சளையும் வேப்பங் கொழுந்தையும் சேர்த்து அரைத்துத் தேய்த்துக் குளித்தால் விஷம் இறங்கும். நமைச்சலும் குறையும்.

குப்பை மேனி இலை நல்ல விஷ முறிவு பச்சிலையானதினால் இதனுடன் மஞ்சளையும் சேர்த்து அரைத்து சிலந்திப் பூச்சி கடித்த இடத்தில் பூசிவர குணம் கிடைக்கும்.

நல்ல சுத்தமான நல்லெண்ணெயயை வெறும் வயிற்றில் இரண்டு தேக்கரண்டி பருகினால் விஷம் முறியும். எந்த விஷக் கடிக்கும் உள்ளங்கை நிறையை நல்லெண்ணெய் விட்டுக் குடித்து விட்டால் விஷத்தை முறித்துவிடும்.

சிறுகீரைக்கு விஷத்தை முறிக்கும் ஆற்றலுண்டு என்பதால் இந்தக் கீரையை மிளகு சேர்த்துக் கஷாயம் வைத்து மூன்று தினங்கள் ஆறு வேளை பருகிவரக் குணம் கிடைக்கும்.

அவுரிச் செடியின் வேர் நல்ல விஷ முறிவாகும். இந்த வேரை நன்கு அரைத்து இதனுடன் வெற்றிலை, மிளகு, குப்பை மேனிக்கீரை சேர்த்து அரைத்துக் கலக்கி நன்கு கொதிக்கவைத்து நாலில் ஒன்றாக சுண்டிய பின்னர் இந்தக் கஷாயத்தைக் காலையிலும் மாலையிலும் மூன்று தினங்கள் பருகி வர பூச்சியின் கூஷத்தை முறித்து விடலாம்.

அற்புதமான விஷமுறிவுப் பச்சிலையான ஆடு தீண்டாப் பாளையின் வேரை நன்கு சுத்தம் செய்து சுத்தமான பசுவின் பால் விட்டு நன்கு அரைத்து ஒரு எலுமிச்சம் பழத்தின் அளவு எடுத்துப் பசுவின் பாலில் கலக்கி அருந்த விஷம் முறியும்.

கடிபட்ட இடத்தில் புண்ணாகி விட்டால் தேங்காய் எண்ணெய்த் தடவி வந்தால் புண் விரைவில் ஆறும்.

தும்பை இலையை நன்கு நைய அரைத்துக் கடிவாயில் பூசினால் விஷத்தை முறிக்கும்.

சிறு குரிஞ்சான் இலையுடன் மிளகு வைத்து அரைத்து உருட்டி வைத்துக்கொண்டு காலையிலும் மாலையிலுமாக இரண்டு வேளை மூன்று தினங்கள்

சாப்பிட்டால் விஷத்தின் தன்மை எத்தகையதாக இருந்தாலும் முறிந்துவிடும். ஆனால் உப்பு, புளி நீக்கிப் பத்திய உணவு உட்கொள்ள வேண்டும்.

எருக்கம் செடியின் தளிர் இலைகளை நன்கு அரைத்துக் கடிவாயில் பூசினால் விஷத்தை முறிப்பதுடன் புண்ணையும் குணப்படுத்தும்.

ஓணான் கடிக்கு மருந்து

வேலி யோரங்களில் முட்டையிட்டு மரங்களிலேயே பெரும்பாலும் காணப்படும் ஓணான் கழனிகளுக்குச் செல்லுகின்றவர்களைக் கடிப்பதற்கு வாய்ப்பு உண்டு. எந்தப் பிராணி கடித்தாலும் அது விஷத்தை உண்டு பண்ணுவதால் ஓணான் கடியினாலும் ஏற்படும் விஷத்தையும் நாம் மருந்தின் மூலம் முறித்துவிட வேண்டும்.

எந்த விஷக்கடிக்கும் கைகண்ட மருந்தான மஞ்சள் இதற்கும் நல்ல மருந்தாகப் பயன் படுகின்றது. கடித்த இடத்தில் முனை ஒடியாத மஞ்சளை சுட்டு வைக்க விஷம் முறியும்.

வெற்றிலையுடன் மிளகு வைத்து மென்றால் விஷத்தை முறிக்கும். சிறுகீரையுடன் மிளகு சேர்த்துக் கஷாயமிட்டு ஒருவாரம் வரைப் பருகி வந்தால் குணம் கிடைக்கும்.

மூங்கில் குருத்தை அரைத்துச் சாறு பிழிந்து இதில் மிளகை ஊற வைத்து இந்த மிளகை ஒரு வாரம் வரை காலையிலும் மாலையிலும் தின்று வரக் குணம் கிடைக்கும்.

கரிசலாங்கண்ணி இலைகளைப் பறித்து வந்து சாறு பிழிந்து இந்தச் சாற்றைத் தொட்டுத் தொட்டுப் பெருங்காயத்தைச் சந்தனச் சாணையில் உரசி இதைக் கடிவாயில் தேய்த்து வந்தால் விஷம் முறியும்.

பசுவின் சாணியுடன் மஞ்சளை வைத்து நன்கு அரைத்துக் கொதிக்க வைத்துக் கடிவாயில் பூச விஷம் முறியும்.

வேப்பிலையுடன் சிறிது மஞ்சளும் சிறிது அறுகம்புல்லும் வைத்து நன்கு நைய அரைத்து ஒரு நெல்லிக்காயளவு மூன்று தினங்கள் ஆறு வேளை உட்கொண்டு உப்பு, புளி, கருவாடு இவை நீக்கி பத்தியம் காத்துவர விஷம் முறியும்.

பல்லி கடிக்கு மருந்து

பல்லி கடியினால் நமது உடல் பெருமளவில் பாதிக்கப்படும். இதன் விஷம் நெஞ்சு வலியை உண்டு பண்ணும் தன்மை கொண்டதாகும். சிலருக்கு உடலில் வீக்கம் ஏற்படும். உடம்பெல்லாம் ஒருவித வலி ஏற்படும். இவர்கள் என்ன கடித்தது என்று தெரியாமல் திண்டாடுவார்கள். தூக்கத்தின் போது பல்லி கடித்ததன் விளைவே

இது. பெரியா நங்கையின் வேர், குதிரைச் செவீ மூலிகையின் வேர் இவைகளை அம்மியில் வைத்து நன்கு அரைத்து பாகல் இலைச் சாறு கொண்டு நன்கு அரைத்து எடுத்து உடம்பில் பூசிச் குளிக்க வேண்டும். இவ்விதம் குறைந்தது பத்து தினங்கள் குளித்து வந்தால் பல்லி கடியினால் ஏற்பட்ட விஷம் முறியும்.

குப்பைமேனி இலை, வேப்பங் கொழுந்து, கறி மஞ்சள். இவைகளைச் சேர்த்து அரைத்து, உடம்பில் தேய்த்துக் குளித்துவர பல்லியினால் ஏற்பட்ட விஷம் முறியும்.

குப்பைமேனி இலையை நன்கு அரைத்து ஒரு நெல்லிக்காயளவு எடுத்துப் பசுவின் பாலில் கலந்து காலையிலும் மாலையிலுமாக மூன்று தினங்கள் ஆறு வேளை பருகிவர பல்லியின் விஷத்தை முறித்து விடலாம்.

நீலி இலையுடன் மிளகு வைத்து அரைத்து ஒரு சுண்டைக்காய் அளவு ஆறு தின்ங்கள் இரண்டு வேளையும் உட்கொண்டு நீராகாரம் பருகி வந்தால் விஷம் முறியும்.

வேலிப் பருத்தி இலையை நன்கு சுத்தம் செய்து இதனுடன் கறிமஞ்சள் சிறிது வைத்து நன்கு நைய அரைத்து ஒரு நெல்லிக்காயினளவு தினம் இரண்டு வேளை விதம் மூன்று தினங்கள் உட்கொண்டு புளி, உப்பு நீக்கிப் பத்தியம் காத்து வந்தால் விஷம் முறியும்.

கம்பளிப்பூச்சிக் கடிக்கு மருந்து

கம்பளிப் பூச்சியானது நமது தேகத்தில் பட்டதுமே ஊரல் ஏற்படும். திட்டுத் திட்டாகத் தேகம் எங்கும் வீங்கிப் போகும். இந்தப் பூச்சிகள் மேலுள்ள முடியானது பார்ப்பதற்குக் கம்பளி போன்று காணப்படுவதால் இதற்கு இந்தப் பெயர் ஏற்பட்டது.

இது நமது தேகத்தில் பட்டுவிட்டால் உடன் திருநீற்றையோ சாம்பலையோ தடவிவிட்டால் மயிர்க் கால்களில் ஏறிய விஷம் முறிந்து குணம் கிடைக்கும்.

இதன் முடியானது உணவுப் பொருட்களில் விழுந்து விட்டால் உயிருக்கு ஆபத்தாகிவிடும். எனவே, வீட்டின் பக்கத்திலுள்ள மரங்களில் கம்பளிப் பூச்சி வந்துவிட்டால் முதலில் அதை அழித்துவிட வேண்டும்.

திருநீற்றைத் தேய்த்தும், வெற்றிலைச் சாறைத் தேய்த்தும் அரிப்பைக் குணப்படுத்தலாம். தலைமுடியை எடுத்துச் சுருட்டி தடிப்பின் மேல் தேய்த்தாலும் குணம் கிடைக்கும். ஒரு வேளை உணவுப் பொருட்களில் இதன் முடி விழுந்து நாம் உட்கொண்டு விட்டால் உடன் உப்பை நிறைய அளவில் கரைத்துக் குடித்துவிட்டால் வாந்தியில் முடி வெளியேறிவிடும்.

நல்லெண்ணெய் நல்ல விஷமுறிவு மருந்தான தினால் உள்ளங்கை நிறைய ஊற்றிக் குடித்துவிட

வேண்டும். சின்ன வெங்காயத்தை சிறிதளவு எடுத்துத் தட்டிப் பிழிந்து சாறு எடுத்து உள்ளுக்குக் கொடுக்க விஷம் முறிந்துவிடும்.

கம்பளிப் பூச்சிதானே, என்ன செய்யப் போகிறது என்று மெத்தனமாக இருந்துவிடக் கூடாது உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய இதன் முடியைக் காற்றில் பறக்கச் செய்யக்கூடாது. எனவே, ஆரம்ப நிலையிலேயே—அதாவது மரங்களின் அடிப்பாகத்தில் அடைசேர்ந்து இருக்கும் போதே மண்ணெண்ணெய்யைத் தெளித்து தீ வைத்து அறவே அழித்து விடவேண்டும்.

அட்டை கடிக்கு மருந்து

அட்டைகளில் பலவகையுண்டு. ஆனால், பொதுவாக அட்டை என்று குறிப்பிடப்படுவது குளம் குட்டைகளிலுள்ள நீரட்டையையே குறிப்பதாகும்.

இந்த அட்டை மனிதனைக் கடிக்கும்போது அவனுக்குத் தெரியாது. பின்னால் இரத்தத்தை உறிஞ்சும்போதுதான் அவனுக்குத் தெரியவரும். அப்போது அவன் கை கொண்டு பற்றி இழுத்து எடுக்க முயன்றாலும் வராமல் ரப்பர் போன்று நீண்டு கொண்டே செல்லும். ஆகவே. கடிவாயில் சிறிது சுண்ணாம்பைத், தடவி விட்டால் இது பிடியை விட்டுவிடும். இது பொதுவாக மனித

உடலிலுள்ள கெட்ட இரத்தத்தையே குடிக்கும். வயிறு நிறைந்த பின்தான் தனது பிடியைத் தளர்த்தும். சுண்ணாம்பை அட்டையின் வாயப்பாகத்தில் தேய்த்து அட்டையின் பிடியைத் தளர்த்தச் செய்து கடிபட்ட இடத்தில் சுண்ணாம்பைத் தேய்த்து விடுவதால் புண் விரைவில் குணமாகும். வேப்பிலையையும் சிறிது துண்டு மஞ்சளையும் சேர்த்து வைத்து அரைத்துக் தேய்த்தும் அட்டைக் கடியினால் ஏற்படும் புண்ணைக் குணப்படுத்தலாம்.

நீராட்டைகளைத் தவிர நிறைய கால்களைக் கொண்டு ஊர்ந்து செல்லுகின்ற அட்டைகளால் கெடுதல் ஏற்படாது. இவைகளை ஆயிரங்கால் அட்டைகளால் கெடுதல் ஏற்படாது. இவைகளை ஆயிரங்கால் அட்டை என்று கூறுவார்கள். இவை ஊர்நது செல்லும்போது ரயில் பெட்டிகள் மெள்ளச் செல்லுவது போன்று தெரியும்.

நீரட்டைகள் நிறைந்த குளங்களில் இறங்கிக் குளிப்பதைத் தவிர்க்க வேண்டும். பாசிகள் நிறைந்து காணப்படும் குளங்களில் இந்த அட்டைகள் கூடுதலாகக் காணப்படும்.

பாச்சை கடிக்கு மருந்து

பாச்சை இல்லாத வீடுகளைப் பார்ப்பது அரிது. எவ்வளவு சுத்தமாக வைத்திருந்தாலும் எப்படியாவது வந்துவிடும்.

இதன் வாயில் அமைந்திருக்கும் கடினமான பற்கள் எதையும் வெட்டிப் பாழாக்கிவிடும். பலகைகளைக் கூட கடித்துவிடும் அமைப்பைக் கொண்ட இப்பாச்சைகள் புண்களில் வாய் வைத்தால விரைவில் குணமாகமாட்டா. எனவே பாச்சைகள் கடித்துவிடாத வண்ணம் புண்களின் மேல் துணி கொண்டு போர்த்தி விட வேண்டும்.

பாச்சை கடித்துவிட்டால் மஞ்சளை நன்கு அரைத்து இதனுடன் சுண்ணாம்பையும் சேர்த்துக் குழைத்துப் பூசிவிட வேண்டும்.

குழந்தைகள் தின்பண்டங்களைத் தின்றால் அவ்விதமே அவர்களைத் தூங்கச் செய்ய விடக் கூடாது. அவர்களின் வாய்ப்பாகத்திலுள்ள தின் பண்டைப் பொடிகளைத் தின்பதற்கு பெரும் பாலும் பாச்சைகள் அவர்களைக் கடித்து விடவும் கூடும்.

வீட்டின் மூலை முடுக்குகளை எவ்வளவு சுத்தமாக வைத்திருந்தாலும் பாச்சைகள் எப்படியும் வந்துவிடும். எனவே இவைகளை ஒழிப்பதற்கு மண்ணெண்ணையை "ஸ்ப்ரே" செய்யும் கருவிகளில் ஊற்றி அடிக்க வேண்டும்.

சுண்ணாம்பு அடிக்கும் காலத்தில் ஒரு சில தினங்கள் வராமலிருக்கும் பாச்சைகள் பின்னர் சில தினங்கள் கழித்து மீண்டும் வந்துவிடும். எனவே, எவ்வளவு சுத்தமாக வைத்திருக்கிறோமோ அவ்வளவும் நல்லது.

தேளி மீனின் விஷம் மாற

தேளானது கொட்டுவதைப் போலத் தேளி மீனும் கொட்டிவிடும். இதற்கும் விஷம் உண்டு. தேளி மீன் கொட்டினாலும் நன்கு கடுக்கும்.

நல்ல சுத்தமான மஞ்சளைச் சிறுநீர் விட்டு நன்கு அரைத்து நன்கு கொதிக்க வைத்து தேளி மீன் கொட்டிய இடத்தில் பூசினால் விஷம் முறியும்.

காணாக்கடியைக் குணப்படுத்த

என்ன பூச்சி கடித்தது, என்ன வண்டு கடித்தது என்று தெரியாமலிருப்பதற்கு "காணாக் கடி" என்று பெயராகும். நாம் காணாத கடி காணாகடியாயிற்று.

எந்த விஷமானாலும் நல்லெண்ணெய்க்கு விஷத்தை முறித்திடும் ஆற்றலுண்டு. எனவே, கைக்கு ஒரு கை நல்லெண்ணெய்யை ஊற்றிக் குடித்துவிட்டால் விஷம் முறிந்துவிடும். காலையில் எழுந்ததும் வெறும்வயிற்றில் இவ்விதம் உள்ளங்கை நிறைய நல்லெண்ணெய குடித்தால் எத்தகைய விஷத்தையும் முறித்துவிடும்.

பனைவெல்லத்தையும் மிளகையும் சேர்த்து இடித்துத் தின்றால் விஷம் முறியும்.

குப்பைமேனி இலைகளைப் பறித்துச் சுத்தம் செய்து இவற்றுடன் சிறு துண்டு சுத்தமான கறி மஞ்சளைச் சேர்த்து அரைத்து ஒரு நெல்லிக் காயளவு காலையிலும் மாலையிலுமாக மூன்று தினங்கள் உட்கொண்டால் விஷத்தை முறித்து விடும்.

கரப்பான் பூச்சி கடிக்கு

பாச்சைகளைப் போலக் கரப்பான் பூச்சியும் வீடுகளில் நிறைய அளவில் காணப்படும். ஆனால் சுத்தமாகப் பெருக்கி, தூசு தும்பு இவை அடையாத முறையில் ஒட்டடை அடித்து வைத்திருந்தால் கரப்பான் பூச்சிகளை வரவிடாமல் செய்து விடலாம்.

இரவு வேளைகளில் கரப்பான் பூச்சிகளின் தொல்லை அதிகமாக இருக்கும். புண்களின் மீது கரப்பான் பூச்சி வாயை வைத்துக் கடித்து ஆற விடாமல் செயதுவிடும். எனவே, புண்ணின் மீது துணி கொண்டு போர்த்தி விடவேண்டும்.

தானியங்களைச் சேகரித்து வைக்கும் அறை, தட்டுமுட்டுச் சாமான்களைப் போட்டுவைக்கும் அறை, மற்றும் பரண்களில் கரப்பான் பூச்சிகள் நிறைய அளவில் காணப்படும்.

குழந்தைகள் எதையாவது தின்றுவிட்டு அவ்விதமே தூங்கி விடுகின்றபோது கரப்பான் பூச்சிகள் குழந்தைகளின் வாய்ப் பகுதியில் சென்று உணவுப் பண்டத்தின் துகள்களைத் தின்னச்

செல்ல இதனால் புண் உண்டாகும். எனவே, குழந்தைகள் படுக்கப்போகும்போது அவர்களின் வாயைச் சுத்தமாகத் துடைக்க வேண்டும்.

புண்களில் அமரும் கரப்பான்பூச்சி புண்ணின் சதைப் பகுதியைக் கடித்தும் புண்ணைப் பெரிது படுத்திவிடும். எனவே, துணிகொண்டு மூடி வைப்பது நல்லதாகும்.

மஞ்சளையும் சுண்ணாம்பையும் சேர்த்து அரைத்துக் கரப்பான் பூச்சி கடித்த புண்ணின் மீது தடவி வந்தால் குணம் கிடைக்கும். புண்ணின் மீது தேங்காய் எண்ணெய்யைத் தடவி வந்தாலும் விரைவில் குணமாகும்.

மீன் கடி விஷத்தை முறிக்க

பாசிகள் நிறைய அளவிலுள்ள குளங்களிலுள்ள சிலவகை மீன்கள் கடித்தால் விஷம் ஏறியதும் உடனே கடுகடுக்க ஆரம்பிக்கும். இந்தக் கடுப்பானது மிகவும் வேதனையைக் கொடுக்கும்.

இத்தகைய மீன்களின் விஷத்தை முறிப்பதற்குச் சோற்றுக் கற்றாழை நமக்குப் பெரிதும் பயன்படுகிறது. இந்தச் சோற்றுக் கற்றாழையைக் 'குமரி'' என்றும் கூறுவார்கள்.

சோற்றுக் கற்றாழையின் மேல்த்தோலைக் கூர்மையான கத்தியால் கீறி அப்புறப்படுத்தி விட்டுச் சோற்றுக்கற்றாழையின் சதைப்பகுதியைத்

துண்டு துண்டாக வெட்டித் தண்ணீரில் இட்டு நன்கு கழுவ வேண்டும். பின்னர் பச்சை நன்னாரி வேரை நன்கு சுத்தம் செய்து துண்டு துண்டாக வெட்டி இரண்டையும் ஒன்றாக வைத்து அரைத்து உருட்டி உட்கொள்ள வேண்டும்.

இவ்விதமாக ஆறு தினங்கள் தினம் ஒரு வேளை வீதம் உட்கொண்டால் எந்தவிதமான விஷத் தன்மை கொண்ட மீனாக இருந்தாலும் விஷத்தை முறித்து குணப்படுத்தி விடலாம்.

பூரான் கடிக்கு மருந்து

இது வேகமாக ஊர்ந்துச் செல்லும். இதைப் பார்ப்பதற்கு பயமாக இருக்கும். நாம் படுத்திருக் கும் போது இது சில சமயங்களில் நம்மையறி யாமலே கடித்துவிடும். கடித்தபின்னர்தான் பூரான் கடித்திருக்கும் என்று தெரியவரும்.

முனைமுறியாத மஞ்சளைச் சுட்டு கடிவாயில் வைத்து விஷத்தை முறித்து விடவேண்டும். பூரான் கடியைக் கவனக் குறைவாக விட்டுவிட்டால் உடலின் மீது தடிப்பு ஏற்படும். இதற்கு வெள்ளரு கின் சூரணம் நல்ல மருந்தாகப் பயன்படும்.

வெள்ளருகின் செடியை வேருடன் எடுத்துச் சுத்தம்செய்து காயவைத்து இதனுடன் குறிஞ்சான் இலை, சுக்கு, கருஞ்சீரகம் மிளகு, சிவதை வேர் இவைகளை சமபங்கு எடுத்து நன்கு காயவைத்து இடித்துச் சூரணமாக்கித் தேனுடன் அல்லது பசு

வெண்ணெய்யுடன் சேர்த்துக் குழைத்து ஒரு வாரத்திற்குக் காலையிலும் மாலையிலும் உண்டு வர குணம் கிடைக்கும்.

சிறு குரிஞ்சான் இலையையும் மிளகையும் சேர்த்து அரைத்து நெல்லிக்காய் அளவு காலையிலும் மாலையிலும் ஒரு வாரத்திற்குச் சாப்பிட வேண்டும்.

நாகதாளி வேரின் சூரணத்தை ஒரு வேளைக்குப் பத்து கிராம் அளவில் ஆறு தினங்களுக்குக் கொடுக்கக் குணம் கிடைக்கும்.

வெள்ளறுகுப் பூண்டின் சாறும் பூரான் விஷத்தை முறிக்கும் ஆற்றல் பெற்றதாகும். எனவே இதையும் உள்ளுக்குக் கொடுத்துக் குணப் படுத்தலாம்.

கரிசலாங்கண்ணி இலை பூரான் போன்ற வற்றின் விஷத்தை முறிக்கும் ஆற்றல் பெற்றுள் ளது. இதன் சாற்றை வெள்ளாட்டுப் பாலுடன் கலந்து கொடுக்க பூரான் விஷத்தை முறித்து விடலாம்.

வேப்பங் கொழுந்து, தளிர், இலை இவைகளும் விஷத்தை முறிக்கும் ஆற்றல் பெற்றவை. இவற் றுடன் மிளகையும் சேர்த்து மென்று தின்ன வேண்டும்.

வெற்றிலைக்கும் விஷத்தை முறிக்கும் ஆற்றல் உண்டு. வெற்றிலைச் சாற்றைப் போதிய அளவு

எடுத்து இதனுடன் மிளகையும் நன்கு பொடித்து போட்டு ஊறவைக்க வேண்டும். பின்னர் வெய்யி லில் உலர்த்திப் பொடி செய்து வைத்துக்கொண்டு இது போன்ற பூரான் வகையைச் சார்ந்த பூச்சிகள் கடித்தால் உள்ளுக்குக் கொடுத்துக் குணமாக்கி விடலாம்.

பனை வெல்லத்துடன் மிளகும் கலந்து சாப்பிடு வதும் விஷத்தை முறிப்பதற்கு உதவும். எனவே, பூரான் கடித்ததென்றால் முதலுதவி செய்துவிட்டுப் பின்னர் வெல்லமுடன் மிளகைக் கலந்து சாப்பிட் டால் விஷம் முறிந்து போகும்.

குப்பைமேனி இலைச் சாற்றுக்கு விஷத்தை முறிக்கும் தன்மையுண்டு. இந்தச் சாற்றுடன் மஞ்சள் தூளையும் கலந்து நன்கு குழைத்து தேகத்தில் பூசினால் பூரான் கடியினால் ஏற்பட்ட தடிப்புகள் மாறிவிடும். நமைச்சலும் குணமாகும்.

பெரும்பாலும் பூரான் நாம் தூங்கும்போது கடித்துவிட வாயப்பு உண்டு. எனவே, பூரான்தான் கடித்திருக்கும் என்று உறுதியாகக் கூறமுடியாது. என்ன கடித்தது என்பது தெரியாமல் உடலெங்கும் தடிப்பு தோன்றும். இதற்குக் ''காணாக்கடி'' என்பார்கள். என்ன பூச்சி கடித்தது என்பது தெரியாமலுள்ள அனைத்திற்கும் காணாக்கடி என்று கூறுவதே பொருத்தமாகும். ஆனால் பூரான் கடித்து விட்டால் இலகுவில் கண்டுபிடித்து விடலாம். சிறிய சிறிய தடிப்புகளின் மூலமும்

அறிப்பின் மூலமும் இலகுவில் பூரான் கடியைத தெரிந்து கொளளலாம்.

பூரான் கடித்ததும் நாம் உணர்ந்து எழுந்து விட்டால் உடனே சிறிதளவு மண்ணெண்ணெய் யைத் தொட்டு அழுத்தித் தேய்த்தால் விஷம் பரவாது முறிந்து போகும்.

நன்கு முற்றிய பூசணிக்கொடியை எடுத்து காயவைத்துத் தூள் செய்து வைத்துக் கொண்டு ஒரு சிட்டிகை எடுத்துத் தேனில் அல்லது பசு வெண்ணெயில் கலந்து சாப்பிட பூரான் கடியினால் ஏற்பட்ட விஷம் முறியும்.

புளியைத் தண்ணீர் விட்டு நன்கு பிசைத்து சாறு எடுத்து இந்தச் சாற்றின் அளவுக்கு நல்லெண் ணெய் விட்டுக் குடிக்கச் செய்தால் பூரான் கடியால் ஏற்பட்ட விஷம் முறிந்துவிடும். பூரான் கடித்த சிறிது நேரத்திற்குள் இந்த மருந்தைக் கொடுக்க வேண்டும். நல்ல பலன் கிடைக்கும்.

பழம்புளியைச் சிறிது தண்ணீர் விட்டு நன்கு கரைத்து எடுத்த சாற்றுடன் புளியாறையையும் இட்டு நன்கு கலக்கி மண்சட்டியில் அடுப்பி லேற்றிக் கொதிக்க வைத்துக் கடிவாயில் பூசி விட்டால் விரைவில் விஷம் இறங்கிவிடும்.

நன்கு கரைத்த புளிச்சாற்றுடன் போதிய அளவு நல்லெண்ணெய் ஊற்றிக் கலந்து நன்கு சூடாக்கிக் கடிவாயில் பற்றுபோல் இட்டாலும் விஷம் முறிந்துவிடும்.

தேள் கடிக்கு

தேள் கொட்ட ஆரம்பித்ததுமே விஷம் தலைக்கேறிவிடும். சில கொடிய தேள்களின் விஷமானது உயிரையே குடித்துவிடும். எனவே தேள்தானே கொட்டியது, சிறிது நேரம் எரியும், பின்னர் சரியாகிப் போகும் என்று மட்டும் இருக்கக்கூடாது. தேள்கொட்டி விட்டால் முதலுதவியாக சாதாரணமாகச் செய்வது போன்று கொட்டிய இடத்திற்கு மேலே கயிறு கொண்டு இறுக்கமாகக் கட்டி கூரிய கத்தி கொண்டு கொட்டிய இடத்தைக் கீறி இரத்தத்தைப் பிதுக்கி வெளியே எடுத்துவிட்டால் விஷம் வெளியேறி விடும்.

உடன் முனை ஒடியாத மஞ்சளை அடுப்பில் இட்டுச் சுட்டுத் தீக்கங்குடன் கொட்டிய வாயில் வைத்தால் விஷம் முறிந்துவிடும்.

குப்பைமேனி இலைக்கு விஷத்தை முறிக்கும் ஆற்றல் நிறைய உண்டு. இந்தச் செடியைப் பிடுங்கி நன்கு சுத்தம் செய்து இலைகளைப் பறித்துக் கசக்கி சாறு எடுத்து இந்தச் சாற்றை இரண்டு காதுகளிலும் இரண்டு துளி விடவும். கொட்டியது தேள் என்று சந்தேகப்பட்டால் குப்பை மேனிச் சாற்றை இரண்டு அவுன்ஸ் அளவில் உள்ளுக்குக் கொடுத்துவிடவேண்டும்.

வெள்ளருகு என்னும் மூலிகை வயல்களின் ஓரங்களில் காணப்படும் செடியாகும். இதன் பூ வெள்ளை நிறமுடன் இருக்கும். இது எத்தகைய

விஷத்தையும் முறித்துக் குணப்படுத்தும் ஆற்றல் பெற்றதாகும். இது சற்றுக் கசப்புத் தன்மை யுடையது. இதன் தண்டு வெள்ளை நிறமுடைய தாகும்.

வெள்ளருகின் இலை, தண்டு, வேர் இவை களுடன் குறிஞ்சான் இலை, சுக்கு, கருஞ்சீரகம், மிளகு, சிவதை வேர் இவைகளையும் கலந்து இடித்து கஷாயம் தயாரித்து மூன்று தினங்கள் ஆறு வேளை டாருகிவர விஷம் முற்றிலும் இறங்கி விடும். மேற்படி மருந்துப் பொருட்களை வெய்யி லில் உலர்த்தி நன்கு காய்ந்த பின்னர் கல்லுரலில் இட்டி இடித்துத் தூளாக்கி வைத்துக் கொண்டால் தேள்கடி போன்ற விஷக்கடிகளுக்கு உபயோகமாக இருக்கும். இந்தப் பொடியில் தேனைக் குழைத்து நாக்கில் தடவினால் சிறிது நேரத்திற்குள்ளாகவே விஷம் முறிந்துவிடும். வெள்ளருக்கு எந்தவிதமான கொடிய விஷத்தையும் முறிக்கும் ஆற்றலுண்டு.

வெற்றிலையில் மிளகை வைத்து மென்று தின்றால் தேளின் விஷம் இறங்கிவிடும். இது பாட்டி வைத்தியமாகும். ஒவ்வொரு வெற்றிலை யிலும் மூன்று மிளகு வீதம் வைத்துக் கொடுத்து மூன்று முறை வெற்றிலையைச் சுவைக்க தேளின் விஷம் முறிந்துவிடும்.

மிளகுடன் தேங்காய்த் துண்டுகளையும் சேர்த்து மென்று தின்றால் தேளின் விஷம் இறங்கி விடும்.

நாயுருவிச் செடியின் வேருக்கு விஷத்தை முறிக்கும் சக்தியுண்டு. இந்த வேரை நன்கு சுத்தம் செய்து வாயில் போட்டு மென்று தின்றால் தேளின் விஷம் முறிந்துவிடும்.

நவாச்சாரத்துடன் சிறிதளவு சுண்ணாம்பை யும் கலந்து தேள் கொட்டிய இடத்தில் பற்றுப் போட்டால் விஷம் இறங்கிவிடும்.

தலைச்சுருளி இலையை நன்கு அரைத்து உடம்பில் பூசி சிறிது நேரம் சென்றபிறகு சீயக்காய் தூள் வைத்துத் தேய்த்துக் குளித்தால் விஷம் இறங்கி குணம் கிடைக்கும்.

நீர்முள்ளி விதையுடன் வெள்ளரி விதையையும் சமபங்கு சேர்த்து அரைத்து ஒரு நெல்லிக்காயளவு தினம் இரண்டு வேளை வீதம் மூன்று தினங்கள் சாப்பிட்டால் சிறுநீர் தாரளமாக வெளியேறி விஷமும் வெளியேறி விடும்.

நாகதாளியின் வேரை நன்கு சுத்தம் செய்து உலர்த்தி எடுத்தபின் கல்லுரலில் இட்டு இடித்துத் தூள் செய்யவேண்டும். பின்னர் வஸ்த்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு ஒவ்வொரு வேளைக்கும் ஏறக்குறைய பத்து கிராம் அளவு எடுத்துத் தேனில் அல்லது சுத்தமான பசு வெண்ணெய்யுடன் கலந்து ஒரு நாளைக்கு இரண்டு வேளை வீதம் மூன்று வேளைக்குக் கொடுத்தால் தேளின் விஷம் இறங்கும்.

நாகதாளிச் செடியின் காயை முள் நீக்கிய பின்னர் நெருப்பில் வைத்துச் சுட்டு சூட்டுடன் சூடாக கடிவாயில் ஒத்தடம் கொடுக்கக் குணம் கிடைக்கும். தேள் கொட்டியதால் ஏற்பட்ட குடைச்சல் குறையும்.

தேள் கொட்டியதும் பாட்டி வைத்தியத்தின் அடிப்படையில் புளியையும் சுண்ணாம்பையும் நன்கு குழைத்துக் கடிபட்ட இடத்தில் தடவிப் பற்று போலப் போட்டால் விஷத்தை முறிப்ப துடன் குடைச்சலையும் தீர்த்து வைக்கும்.

தும்பை இலைக்குப் பொதுவாகவே விஷத்தை முறிக்கும் அற்புதமான சக்தியுண்டு. எனவே தும்பையிலையுடன் சிறிதளவு மஞ்சள் வைத்து வெண்ணெய்ப் போன்று அரைத்து உள்ளுக்குக் கொடுத்து நீராகாரத்தையும் குடிக்கக் கொடுத்து விட வேண்டும். இவ்விதம் அரைத்ததில் கொஞ்சம் எடுத்துத் தேள்கொட்டிய இடத்தில் வைத்துக் கட்ட விஷம் இறங்குவதுடன் குடைச்சலும் தீரும்.

சின்ன வெங்காயத்தை நன்கு வடிய வடிய அரைத்துத் தேள் கொட்டிய இடத்தில் வைத்துக் கட்டினால் விஷம் இறங்கும். குடைச்சலும் குறையும்.

தேள் கொட்டிவிட்டால் சிறிது குடைச்சல் எடுக்கும் என்று கவனக் குறைவாக இருந்துவிடக் கூடாது. தேளில் பலவகையுண்டு. எனவே முதலுதவி செய்து பிறகு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதே நல்லது.

அடுக்கு ஓடு வேயப்பட்டிருக்கும் வீடுகளில் தேள் குடியிருக்க வாய்ப்பு உண்டு. எனவே வீடு களை அடிக்கடி ஒட்டடையடித்தும், குப்பை சேராமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

சாதாரணத் தேள் கொட்டினால் சுண்ணாம் பைத் தடவினால் குடைச்சல் குணமாகி விடும். அல்லது முனை முறியாத மஞ்சளைச் சூட்டு வைத் தாலும் குணம் கிடைத்துவிடும். கடுப்பு அதிகமாக இருந்தால் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். சில சமயங்களில் தேளின் கொடுக்கு முள் முறிந்து கடிவாயில் தங்கிவிடும். இவ்விதம் முறிந்து போன முள்ளை வெளியே எடுப்பதற்குச் சின்ன வெங்காயத்தை இரண்டாக வெட்டிக் கடிவாயில் வைத்துச் சிறிது தேய்த்தால் முள்ளின் முனைப்பகுதி வெங்காயத்தின் மூலம் வெளியே வந்துவிடும். முள்ளின் முனை வெளியே வருவது வரைக் குடைச்சல் இருக்கும்.

கத்தரிக்காயை அடுப்பிலிட்டு நன்கு சுட்டு அதன் பின்னர் இரண்டாக வகிர்ந்து எடுத்து இதைத் தேள் கொட்டிய இடத்தில் சூட்டோடு சூடாக வைத்துக் கட்ட விஷம் முறியும். குணம் கிடைக்கும்.

எட்டி வேரை நன்கு தூள் செய்து இதனுடன் சிறுநீர் கலந்து உள்ளுக்குக் கொடுக்க எந்த விதமான கொடிய தேளாக இருந்தாலும் விஷம் முறிந்துவிடும்.

நட்டுவாக்காலி தேளின் இனத்தைச் சார்ந்தது. இது தேளைவிடவும் பெரிய அளவில் இருக்கும். கன்னங்கரேலென்று தேளின் உருவ அமைப்புடன் காணப்படும். இது விரைவாக ஊர்ந்து செல்லாது. சற்று நிதானமாகத்தான் செல்லும்.

பாழடைந்த வீட்டின் சுவர்களில் சுவரோடு சுவராக ஒட்டிக் கொண்டு இருக்கும். இதை அடிப்பதற்குக் கொம்பு ஒன்றும் தேவையில்லை. பசுவின் சாணியை எடுத்து இதன்மீது குறி பார்த்து எறிவார்கள். எறியப்படும் சாணி சுவரோடு சுவராக நட்டுவாக்காலியைப் பிடித்துக் கொள்ளும் நட்டுவாக்காலியும் சாணியின் உள்ளேயிருந்து மூச்சு விடமுடியாமல் இறந்துபோகும்.

சில சமயங்களில் நடைபாதையில் வண்டிகள் ஏறி இறந்த நிலையில் கிடக்கும். அப்போது இதனுடைய பெரிய கொடுக்கை பார்த்தாலும் பயமாக இருக்கும், வீட்டைச் சுத்தமான முறையில் வைத்திருந்தால் நாட்டுவாக்காலி வராது.

விறகுத் தொட்டிகளில் சில இடங்களில் இது காணப்படுகின்றது. எனவே விறகுத் தொட்டி களில் வேலை பார்ப்போர் மிகவும் கவனமுடன் இருக்க வேண்டும். விறகின் நிறத்தோடு நிறமாக இதுவும் ஐக்கியமாகிக் காணப்படும். இது கொட்டினால் பிழைப்பது என்பது அபூர்வம்தான். உடனே முதலுதவி செய்ய வேண்டும். கடிவாயின் மேல் கட்டுப் போட்டுத் தாமதியாமல் கடிவாயில்

கத்தி கொண்டு கீறி விஷ இரத்தத்தை வெளி யேற்றிவிட வேண்டும். விஷம் தலைக்கு ஏறிவிடா மல் மணலை பரந்த மண் சட்டியில் இட்டு நன்கு வறுத்து துணியில் வேப்பிலையைப் பரப்பி ஓத்தடம் கொடுக்க வேண்டும்.

தேங்காயைத் துருவி பால் பிழிந்து கொடுக்க வேண்டும். இவையனைத்துமே விரைந்து செய்ய வேண்டும். மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று நவீன மருத்துகளின் மூலம் குணமாக்க வேண்டும்.

கொட்டிய உடன் விரைந்து கட்டுப்போடவும், மஞ்சளைச் சுட்டுக் கடிவாயில் வைக்கவும், நச்சு இரத்தத்தை வெளியேற்றவும், தலையில் மணல் ஒத்தடம் கொடுககவும், காலதாமதமின்றி தேங் காயப் பால் பிழிந்து கொடுக்கவும். இத்தனையும் செய்தால் பிழைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

வெள்ளருக்கு எவ்வித கொடிய விஷத்தை யும் முறிக்கும் சக்தியுண்டு. இந்தச் செடியை வேருடன் பிடுங்கி நன்கு சுத்தம் செய்து கல்லுரலில் மிளகையும் கலந்து இடித்து ஏறக்குறைய முப்பது மில்லி கொடுத்துவிட்டால் குணம் கிடைக்கலாம். இடித்த சக்கையையும் கொட்டிய வாயில் வைத்துக் கட்டிவிட வேண்டும்.

மஞ்சளின் புகைக்கு விஷத்தைப் போக்கும் அற்புதமான ஆற்றலுண்டு. ஆகவே இரண்டு மஞ்சளை எடுத்துச் சுட்டு இந்தப் புகையைக் கொட்டுவாயில் காட்டிக் கொண்டிருக்க வேண்டும்.

நட்டுவாக்காலியின் கொடிய விஷத்தை முறிப்பதற்குக் கத்தரிக்காய் பெரிதும் பயன்படுகிறது. கத்தரிக்காயைக் அடுப்பிலிட்டு நன்கு சுட்டபின்னர் இரண்டாகப் பிளந்து கடிவாயில் வைத்து சூட்டோடு சூடாக கட்டிவிட வேண்டும்.

நன்கு காய்ந்த எட்டி வேரைத் தூள்செய்து சிறுநீருடன் கலந்து உள்ளுக்குக் கொடுக்க விரைவில் விஷம் முறிந்துவிடும். இவையனைத்தையும் விரைந்து செய்தால்தான் விஷம் முறியும்.

எலிக்கடி விஷம் நீங்க

எலிக்கடியை எந்தக் காரணம் கொண்டும் அலட்சியப்படுத்தி விடக்கூடாது. இந்த விஷமானது ஆஸ்த்துமா, பிளேக் போன்ற கொடிய நோய்களை உண்டுபண்ணிவிடும்.

வேலிப்பருத்தி இலைகளைப் பறித்து நன்கு சுத்தம் செய்து சிறிது தண்ணீர் விட்டு நன்கு இடித்துச் சாறு பிழிந்து ஏறக்குறைய நூறு மில்லி அளவு பருகிவிட்டால் எலிக்கடியினால் ஏற்பட்ட விஷத்தை முறித்து விடலாம். வேலிப்பருத்தி இலைச் சாற்றைப் பருகும் போது கண்டிப்பாக உப்பு, புளி இவைகளை சேர்க்கக் கூடாது.

எலிக்கடிக்கு நல்ல மருந்தாக பூனையின் காய்ந்த மலம் பயன்படுகிறது. நன்கு காய்ந்த

நிலையிலுள்ளதைப் பொடித்து சிறுநீரில் கலந்து குடிக்கச் செய்யவேண்டும். இதைக் கேட்பதற்கே அருவருப்பாக இருந்தாலும் இது நல்ல விஷமுறிவு மருந்தாகும்.

நன்கு காய்ந்த பூனை மலத்தையும், உப்பையும் பழைய மண் பாத்திரத்தில் இட்டு நன்கு வறுத்தெடுக்கவேண்டும். இவ்விதம் நன்கு வறுத்தெடுத்த பின்னர் கீழே இறக்கி வைத்து விட்டுத் தண்ணீரை நன்கு சூடாக்கிப் போதிய அளவு மண்பாத்திரத்தில் விட்டுப் பழையபடியும் அடுப்பில் வைத்து ஒரு குச்சி கொண்டு கிளறிவிட்டு நன்கு கொதித்த பின்னர் இறக்கி எலி கடித்த இடத்தில் பூசினால் வீக்கம் குறைவதுடன் விஷமும் முறியும்.

பூனையின் பழைய மலத்தை நன்கு பொடித்து வஸ்த்திரகாயம் செய்து மூக்குப்பொடி போன்று உபயோகித்தால் விஷம் முறிவதுடன் எலிகடியினால் ஏற்படும் ஜன்னியையும் குணப்படுத்தலாம். எலிக்கடியால் இருதயம் பாதித்து விடுவதுடன் நரம்புமண்டலமும் பாதித்துவிடும். ஜன்னி ஏற்படாமலிருக்க இவ்விதம் வஸ்த்திரகாயம் செய்யப்பட்ட தூள் நல்ல மருந்தாகப் பயன்படுகிறது.

இந்தத் தூளை ஒரு மெல்லிய துணியில் சிறிது கொட்டிப் பரப்பி, பின்னர் திரிபோன்று திரித்துக் கொளுத்தி புகையை மூக்கில் ஏற்றினால் எலிக்கடியின் விஷம் முறிவதுடன் வலியும் குறையும்.

புளி, உப்பு இல்லாமல் பத்திய உணவையே ஆறு தினங்களுக்கு உட்கொள்ள வேண்டும்.

அழிஞ்சி மரத்தின் வேரிலுள்ள மேல்த்தோலை நன்கு சுரண்டி எடுத்து இதைத் தண்ணிர்விட்டு நன்கு வடிய வடிய அரைத்து நெல்லிக்காயளவு உள்ளுக்குக் கொடுத்து வெந்நீர் குடித்துவந்தால் விஷம் முறியும்.

நன்னாரி வேருக்கு எலிக்கடியின் விஷத்தை முறிக்கும் அற்றலுண்டு. பச்சை நன்னாரி வேர் கிடைத்தால் நன்றாக அரைத்துப் பசுவின் பாலில் கலக்கிக் கொடுத்தால் விஷம் முறியம்.

கொடிக்கள்ளிச் செடியின் வேருக்குப் பொதுவாக விஷத்தை முறிக்கும் ஆற்றலுண்டு. இந்த வேரை கொண்டுவந்து நன்கு சுத்தம் செய்து மேல்த்தோலைச் சிறிதளவு சீவி எடுத்து இதனுடன் சிறிது பூண்டுத் திரிகளையும் வைத்து நன்கு அரைத்து சிறிது அளவு உட்கொண்டு நீராகாரத்தையும் குடித்து விட்டால் எலிவிஷம் முறியும்.

தலைச்சுருளி வேர், எட்டி மரத்தின் வேர், வெள்ளருகு, மிளகு இவைகள் அனைத்தையும் சம பங்கு எடுத்து நன்கு அரைத்து நெல்லிக்காய் அளவு காலையிலும் மாலையிலும் சாப்பிட எலிக்கடியின் கொடிய விஷத்தை முறித்துவிடும். பத்தியம் காக்க வேண்டும்.

சில எலிகள் கடித்தால் விஷமானது உள்ளே இருந்து கொண்டு துன்பத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும். இதற்கு தைலம் தயாரித்து இந்தத் தைலத்தை வாரப் ஒருமுறைத் தேய்த்து வெந்நீரில் குளிக்க வேண்டும்.

தலைச்சுருளி வேரின் பட்டை, வெள்ளரு, நீலிவேர், குப்பைமேனி வேர், வாகை வேர், சிவன் வேம்பு, வீழி வேர், ஆடுதீண்டாப்பாளை இலை அனைத்தையும் ஒவ்வொன்றையும் குறைந்தது 100 மில்லி எடுத்து நன்கு சிதைத்து ஒரு பழைய மண்பானையில் இட்டு எட்டு பங்கு தண்ணீர்விட்டு இதை ஒரு பங்கு வருவது வரை விறகு அடுப்பால் எரித்து அதே அளவு சுத்தமான நல்லெண்ணெய் கலந்து தீயை அதிகமாக எரியவிடாமல் மெல்ல எரிய விடவேண்டும். எண்ணெயும் சாறும் ஒன்றாகக் கலந்துவிட்டதா என்பதை அறிவதற்கு வெற்றிலையைக் கிள்ளிப் போட்டுப் பார்கக வேண்டும். "சடசடா" என்று சத்தம் வந்ததும் இறக்கிவிட வேண்டும். அதிகமாக அடுப்பெரிந்து எண்ணெய் முறிந்துவிடக் கூடாது. இவ்விதம் பதமாகத் தயாரித்த தைலத்தை வாரம் ஒருமுறைத் தேய்த்துக் குளித்து வந்தால் விஷம் முறிந்து போகும். இந்த எண்ணெய் எலிகடிக்கு மட்டுமின்றி, பூரான்கடி, பாம்பு கடி போன்ற விஷக்கடிகளுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் நாட்களில் உப்பு, புளி இவைகளைக் கண்டிப்பாக உணவில் சேர்க்கக் கூடாது.

குப்பைமேனி இலைகளை நிறைய அளவில் பறித்து வந்து நன்கு சுத்தம் செய்து கல்லுரலில் இட்டு நன்று இடித்துப் பிழிந்து சல்லடையில்விட்டு அரித்து ஏறக்குறைய இருநூறு மில்லி சாறு எடுக்க வேண்டும். இந்தச் சாற்றுடன் இதே அளவு பசும் பாலும், அதே அளவு நல்லெண்ணெய்யும் விட்டுப் பக்குவமாகக் காய்ச்ச வேண்டும். காய்ச்சும்போது எண்ணெய் முறிந்துவிடாமல் பக்குவமான நிலையில் காய்ந்ததா என்பதைப் பார்ப்பதற்கு வெற்றிலையை இட்டுப் பார்த்துச் "சடசடா" என்ற சத்தம் வந்ததும் எண்ணெய்யை இறக்கி விடவேண்டும். இவ்விதம் தயார் செய்த எண்ணெய்யை ஒரு சீசாவில் அடைத்து வைத்துக் கொண்டு வாரத்தில் இரண்டு தினங்கள் ஒரு அவுன்ஸ் எண்ணெய் வீதம் தேய்த்து குளிர்ந்த நீரில் குளித்து வந்தால் எலிக்கடியால் ஏற்டட்ட விஷத்தை முறித்து விடலாம்.

குப்பைமேனி இலையை நன்கு சுத்தம் செய்து அரைத்து ஒரு எலுமிச்சம் பழத்தின் அளவு எடுத்துக் காலையில் வெறும் வயிற்றில் பசுவின் பாலில் கலந்து சாப்பிடவேண்டும். இவ்விதம் மூன்று தினங்கள் சாப்பிட்டு உப்பு, புளி நீக்கி பத்தியம் காத்து வந்தால் எலிக்கடியினால் ஏற்பட்ட விஷம் முறியும்.

இந்த எண்ணெய்யைப் போல இன்னொரு எண்ணெய்யும் எலி விஷத்தை மட்டுமன்றி எல்லா

விதமான விஷங்களையும் முறிக்கும் ஆற்றல் பெற்றது.

வேப்பம் பட்டை, அழிஞ்சிப்பட்டை, கொடி வேலிப் பட்டை, வேலிப்பருத்தி வேரின் பட்டை இவைகளே இந்த எண்ணெய் தயாரிப்பதற்குத் தேவையான மருந்துப் பொருட்களாகும். நன்கு முற்றிய வேப்பமரத்தின் பட்டை நூறு கிராம் என்றால் இதர பட்டைகள் ஒவ்வொன்றும் இருபது கிராம் வீதம் எடுத்துக்கொள்ள வேண்டும். இவை அனைத்தையும் பசுவின் பாலை விட்டு நன்கு அரைத்துக் குழம்புபோல் தயார் செய்ய வேண்டும். பின்னர் இதனுடன் அரைப்படி நல்லெண்ணெய் விட்டு முன் சொன்ன பக்குவத்தில் எண்ணெய் முறிந்து போகாமல் காய்ச்சி எடுத்து ஒரு சீசாவில் வடிகட்டி வைத்துக் கொண்டு வாரத்திற்கு ஒரு முறை தலையில் தேய்த்துச் சிறிது பொறுத்துக் குளித்து வந்தால் விஷக்கடிகள் எதுவாயினும் முறிந்து விடும்.

இந்த எண்ணெயத்தேய்த்துக் குளிக்கும் அன்று உப்பு, புளி, கருவாடு நீக்கிப் பத்தியம் காக்க வேண்டும். இவ்விதம் நான்கு வாரங்கள் குளித்தால் எலிகடியால் ஏற்பட்ட விஷம் முறிந்து நல்லகுணம் பெறலாம்.

எலிகடிக்கு தலைச்சுருளி வேரின் சூரணம் சிறந்த மருந்தாகும். இதைக் கீழ்க்கண்ட முறையில் தயாரிக்க வேண்டும்.

தலைச்சுருளி வேர் இருநூறு கிராம் எடுத்துக் கொண்டு இத்துடன் திப்பிலி, மிளகு, எட்டிப் பட்டை, வாகைப்பட்டை, சிவதை வேர், கடுகு ரோகணி, வீழிவேர் சுக்கு, வெள்ளருகு, கடுக்காய்த் தோல், சிவனார் வேம்பு, கருஞ்சீரகம் இவைகளை யும் நாற்பது கிராம் எடுத்துக் கொள்ள வேண்டும். இவை அனைத்தையும் நன்கு காய வைத்து கல்லுர லில் இட்டு நன்றாக இடித்துத் தூள் செய்து வைத் துக் கொண்டு காலையிலும் மாலையிலும் தினந் தோறும் நாற்பது தினங்கள் பசு வெண்ணெய்யில் அல்லது நெய்யில் குழைத்துச் சாப்பிட்டு வந்தால் எலிக்கடி மற்றும் பொல்லாத விஷக்கடிகளால் ஏற்பட்ட விஷம் முறிந்து குணம் பெறலாம்.

உப்பு, புளி, காரத்தைக் குறைத்து கருவாடு, பூசணிக்காய் இவைகளை இந்த நாட்களில் அறவே நீக்கிவிட வேண்டும்.

சிறுகீரையின் அருமை பெருமைகளைத் தெரி யாதவர்களே இல்லை. இந்தக் கீரை விஷத்தையும் முறிக்கும் அற்புத சக்தி படைத்தது என்பதை பலர் அறிந்திருக்கமாட்டார்கள். சிறுகீரை வேருடன் நீலிவேர், சங்கம் வேர், குப்பைமேனிச் செடியின் வேர், கருடன் கிழங்கு, பரங்கிப் பட்டை, ஆடு தீண்டாப் பாளையின் வேர் இவற்றைச் சம பங்கு எடுத்து சூரணம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் சுத்தமான பசுவின் பாலில் இந்தச் சூரணத்தை இட்டு நன்கு அரைத்து

உருண்டைகளாக உருட்டிக் காயவைத்துக் கொண்டு, தினந்தோறும் காலையிலும் மாலையிலும் ஒவ்வொரு உருண்டை வீதம் உட்கொண்டு பசும் பாலையும் பருகி வந்தால் எலி விஷத்தை அறவே முறித்துவிடலாம்.

பூனை கடிக்கு மருந்து

“பூனை கடித்துவிட்டால் பூலோகத்தில் மருந்தில்லை” என்பார்கள். இதன் விஷமானது மிகவும் கொடியது என்பதை உணர்த்தவே இவ்விதம் கூறுகிறார்கள். நம்மைச் சுற்றிலுமுள்ள எத்தனையோ மூலிகைகள் நல்ல மருந்தாகப் பயன்படுகின்றபோது பூனையின் விஷத்தையும் நிச்சயமாகப் போக்கிவிடலாம்.

நீலி இலைக்குப் பொதுவாக விஷத்தை முறிக்கும் ஆற்றல் உண்டு என்பதை நாம் நன்கு அறிவோம். இந்த இலைகளைப் பறித்துவந்துநன்கு சுத்தம் செய்து ஒரு கை இலையுடன் ஆறு மிளகையும் வைத்து நன்கு அரைத்து உருட்டி ஒரு எலுமிச்சம் பழத்தின் அளவு எடுத்து உட்கொண்டு நீராகாரத்தையும் பருகிவிட பூனைக்கடியால் ஏற்பட்ட விஷமானது முற்றிலும் இறங்கிவிடும்.

இதே மருந்தைக் குரங்குக் கடியினால் ஏற்படும் விஷத்தை முறிப்பதற்கும் கொடுக்கலாம்.

சிறுகீரைக்கு பூனையின் விஷத்தை முறிக்கும் ஆற்றலுண்டு. சிறுகீரையுடன் மிளகு சேர்த்துக் கஷாயம் வைத்து அருந்தினால் விஷத்தை முறித்துக் குணம் கிடைக்கும்.

சிறுகீரை வேருடன் குப்பைமேனி வேர், பரங்கிப் பட்டை, நீலிவேர், கருடன கிழங்கு, சங்கம் வேர், ஆடு தீண்டாப்பாளை வேர் ஆகிய இவற்றை நன்கு காயவைத்து இடித்துத் தூளாக்கிப் பின்னர் நல்ல சுத்தமான பசும்பால் விட்டு அரைத்து உருட்டிக் காயவைத்துக் கொண்டு ஒவ்வொரு உருண்டையாகக் காலையிலும் மாலையிலும் ஒரு வாரத்திற்குச் சாப்பிட்டு வந்தால் பூனைக் கடியால் ஏற்பட்ட விஷத்தை முறித்து விடலாம்.

குப்பைமேனிச் செடியும் இலைகளும் நல்ல விஷமுறிவாகும் என்பதை அறிவோம். இந்தக் குப்பைமேனிச் செடியின் மேல்தோலை நன்கு சீவி எடுத்து இதனுடன் பசும்பால் விட்டு நன்கு அரைத்து சுண்டைக்காய் அளவு எடுத்துக் காலையிலும் மாலையிலும் மூன்று தினங்களுக்குக் கொடுத்து வந்தால் குணம் கிடைக்கும்.

கையாந்தகரை என்று வழங்கப்படுகின்ற கரிசலாங்கண்ணி இலைகளைப் பறித்து நன்கு சுத்தம் செய்து சாறு எடுத்து இந்தச் சாற்றில் பெருங்காயத்தைக் தொட்டுத் தொட்டுச் சந்தனச் சாணையில் அரைத்து இந்தக் குழம்பைக் கொஞ்சம் சூடுபண்ணி

பூனையின் கடிவாயில் இட்டால் விஷம் முறியும். இவ்விதம் காலையிலும் மாலையிலுமாக மூன்று தினங்கள் இட்டு வர இவ்விஷம் இறங்கிவிடும்.

பூனை கடித்துவிட்டால் சற்று அக்கறையுடன் மருந்துகளை உட்கொண்டு பத்தியமும் காத்துவர வேண்டும். பேய்ச்சுரை என்னும் செடிபற்றி அறிந்திருப்போம். இந்தச் செடியின் தண்டை கடிவாயில் வைத்துக் கட்டினால் விஷம் இறங்கும். இந்தச் செடியின் தண்டைக் காயவைத்துப் பொடித்து கடிபட்ட புண்ணில் வைத்துக் கட்ட விஷம் முறியும்.

நாய்க் கடிக்கு மருந்து

வெறிநாய் மட்டுமல்லாமல் எல்லா நாய்களுக்கும் விஷமுண்டு. வெறிநாய் கடித்துவிட்டாலோ உயிருக்கு ஆபத்து ஏற்படும். எனவே விரைவில் அதிகக் கவனம் எடுத்துக் கொண்டு உரிய மருந்துகளை உட்கொண்டு குணப்படுத்த வேண்டும். சாதாரணமாகத் திரியும் தெரு நாய்கள் கடித்தாலும் கவனமுடன் விஷத்தைப் போக்கு மருந்து உட்கொள்ள வேண்டும். சாதாரண நாய் தானே என்று கவனக்குறைவாக இருந்துவிடக் கூடாது. நாய் விஷம் மிகவும் கொடியது.

நாய்களுக்கு வெறிபிடித்து விட்டால் சரிவரக் குரைக்காது. திடீர் திடீரென்று குரைக்க ஆரம்

பிக்கும். பின்னர் இதர விலங்குகளையும் கடிக்க ஆரம்பிக்கும்.

மனிதர்களை நாய் கடித்தவுடன் உடலில் சில மாறுதல்கள் ஏற்படும். இந்த மாறுதல் பயத்தினால் ஏற்படுவது என்று எண்ணிவிடக் கூடாது. கடியுண்டவர்கள் மூச்சுத் திணறலினால் அவதிப்படுவார்கள். இந்த நிலைமை ஏற்படுவதற்கு முன்னால் இவர்களை மருத்துவமனைக்குக் கொண்டுபோக வேண்டும். முதலுதவியாகக் கடிவாயின் மேல் கயிறுகொண்டு பலமாகக் கட்டி விஷம் இருதயத்தை நோக்கிச் செல்லவிடாமல் கூரிய கத்தி கொண்டு கடிவாயைக் கீறி விஷம் கலந்த இரத்தத்தை வெளியேற்ற வேண்டும். இந்த முறை எந்த விஷப்பிராணி கடித்தாலும் உடன் மேற்கொள்ள வேண்டிய முதல் சிகிச்சையாகும்.

பிரெஞ்சு நாட்டு உயிரியல் அறிஞரான லூயிபாஸ்டியர் கண்டுபிடித்த மருந்து வெறிநாய்க் கடிக்கு சிறந்த மருந்தாகப் பயன்பட்டு வருகிறது. எனவே, உடன் மருத்துவமனைக்கு கடிபட்டவர்களை எடுத்துச் சென்று சிகிச்சை அளிக்க வேண்டும்.

பக்கத்தில் மருத்துவமனை வசதி இல்லாதவர்கள் சாதாரண நாய் அல்லது வெறிநாய் கடியாக இருந்தாலும் முதலில் என்ன வழிமுறைகளைக் கையாள வேண்டும். என்ன என்ன மருந்துகளைக் கொடுக்க வேண்டும் என்பது பற்றிப் பார்ப்போம்.

முன்பு குறிப்பிட்டது போன்று கடிவாயின் மேல் கயிறு கொண்டு இறுக்கமாகக் கட்டி கூரிய கத்தி கொண்டு கடிவாயைக் கீறி பிதுக்கி விஷம் கலந்த இரத்தத்தை வெளியேற்றி விடவேண்டும்.

எங்கும் வளர்ந்து காணப்படுகின்ற எருக்கம் செடி நல்ல விஷமுறிவுத் தன்மை கொண்டதாகும். எருக்கம் பாலிற்கு விஷத்தை முறிக்கும் சக்தியுண்டு. எருக்கஞ் செடியின் இலையை ஒடித்து அதன் பாலை கடிவாயில் பூசவேண்டும்.

நல்ல சுத்தமான கல் சுண்ணாம்பிற்கு விஷத்தை முறிக்கும் சக்தியுண்டு. சுண்ணாம் புடன் இலவமரத்துப் பிசினை எடுத்துச் சூடாக்கி நன்கு குழைத்து கடிவாயில் பூசிவிட்டால் விஷம் இறங்கும். இந்தக் குழம்பைத் தொடர்ந்தாற் போல் மூன்று தினங்கள் பூசிவர வேண்டும்.

எருக்கம் பாலை நிறைய அளவில் எடுத்து, எருக்கம் செடியின் வேரை நன்கு சுத்தம் செய்து வடிய வடிய எருக்கம் பாலை ஊற்றி அரைத்து இந்தக் குழம்பைக் கடிவாயில் பூசி மெல்லிய துணி கொண்டு கட்டிவிடவும். இவ்விதம் மூன்று தினங்கள் கட்டி வந்தால் இந்தக் குழம்பு விஷத்தை அறவே முறித்துவிடும். ஆனால் கடிவாயில் புண் ஏற்படும். புண்ணை ஆற்றுவதற்கு மஞ்சளை நன்கு பொடித்துத் தேங்காய் எண்ணெய்யில் குழப்பிப் பூசவேண்டும்.

எந்த நாய் கடித்தாலும் உடன் கடிவாயின் மேல் கட்டுப் போட்டுவிட்டு நல்ல சுத்தமான நல்லெண்ணெய்யை உள்ளங்கை நிறைய ஊற்றிக் குடித்துவிட வேண்டும்.

சுண்டைக்காய்ச் செடியின் இலை கிடைத்தால் இந்த இலைகளை நன்கு வதக்கி ஒரு மெல்லிய துணியில் கட்டி, கடிபட்ட இடத்தில் ஒத்தடம் கொடுக்க வேண்டும். சுண்டைச் செடியின் இலைக்கு நாய் விஷத்தை முறிக்கும் ஆற்றலுண்டு. இவ்விதம் சுடச் சுட இரண்டு மூன்று முறை ஒத்தடம் கொடுத்துவிட்ட பின்னர் வதக்கிய சுண்டை இலையைக் கடிவாயில் வைத்து நன்கு இறுக்கமாகக் கட்டிவிட வேண்டும்.

நீலி என்னும் செடியின் இலைக்கு நாய்க்கடி யால் ஏற்படும் விஷத்தை முறித்துக் குணப்படுத் தும் சக்தியுண்டு. எனவே நீலி இலையை நன்கு சுத்தப்படுத்தி ஒரு கை எடுத்து இதனுடன் மிளகு பத்து வைத்து நன்கு வெண்ணெய்ப் போல நைய அரைத்து ஒரு நெல்லிக்காயளவு உட்கொண்டு நன்கு புளித்த நிலையில்லாத நீராகாரத்தையும் பருகவேண்டும். இவ்விதமாக மூன்று தினங்கள், தினம் இரண்டு வேளை வீதம் சாப்பிட் வேண்டும். விரைவில் குணம் கிடைக்கும்.

சிறுகீரையின் வேர், நீலி வேர், குப்பைமேனி வேர், கருடன் கிழங்கு, பரங்கிப்பட்டை, சங்கம் வேர், ஆடு தீண்டாப்பாளையின் வேர், அறுசம்புல்

மிளகு அவையனைத்தையும் ஓரளவு சமபங்கு எடுத்து நன்கு காயவைத்து இடித்துத் தூளாக்கி சூடான பசும்பாலில் கொட்டி கலக்கி ஆறியபின் உருண்டைகளாகப் பிடித்து நிழலில் காயவைத்து ஒவ்வொரு மாத்திரை வீதம் காலையிலும் மாலையிலும் சாப்பிட்டுவர, எந்தவிதமான நாய்க்கடியாக இருந்தாலும்— வெறிநாயே கடித்திருந்தாலும் குணம் ஏற்படும்.

முள் முருக்கு விதைகள் கொஞ்சம் எடுத்து அடுப்புக் கனலில் இட்டு சுட்டெடுத்து இவற்றுடன் ஏறக்குறைய இதேயளவு நாய்ச்செவி இலையையும் சேர்த்துச் சிறுநீர் க்லந்து நன்கு அரைத்து, பழைய பரந்த மண்சட்டியில் அடுப்பில் வைத்து நன்கு கொதிக்க வைத்து சுடச்சுட கடிவாயில் பூசிவர வேண்டும். இவ்விதம் மூன்று தினங்கள் ஒவ்வொரு வேளை பூசிவர எவ்வளவு கொடிய விஷமுள்ள நாயின் கடியாக இருந்தாலும் விஷத்தை முறித்துக் குணப்படுத்தி விடலாம்.

இவ்விதம் பூசிவிட்டு ஒரு கஷாயத்தையும் தயார் செய்து பருகுவதற்குக் கொடுக்க வேண்டும். முள்ளு முருக்கை விதை, நரியிலந்தை, அவுரியின் வேர், அருகம்புல், வெற்றிலை இவையனைத்தையும் ஏறக்குறைய சமஅளவு எடுத்து சிறிது மிளகும் கலந்து இடித்து மண்பாத்திரத்தில் கஷாயமிட்டு சுண்டக் காய்ச்சி இறக்கி தினம் இரண்டு வேளை ஆறு தினங்கள் காலையிலும் மாலையிலும்

கொடுத்து வந்தால் விஷம் முழுவதும் இறிங்கி குணமாகும்.

முருங்கை இலை, தலைப்புண்ணாக்கு இலைகள் இரண்டையும் சம அளவு எடுத்துச் சிறுநீர் விட்டு அரைத்து நன்கு கலக்கிப் பழைய பரந்த மண் பாத்திரத்தில் இட்டு நன்கு கொதிக்க வைத்துச் சூட்டோடு சூடாக கடிவாயில் பூசிவர வேண்டும். இவ்விதம் மூன்று தினங்கள் காலையிலும் மாலையிலும் பூசிவர விஷத்தை முறித்துக் குணத்தை உண்டுபண்ணும்.

வெள்ளெருக்கு வேரின் மேல்த் தோலை கத்தி கொண்டு சீவி எடுத்து இந்தச் சீவலுடன் கோழியின் இரத்தத்தைக் கலந்து நன்கு வடிய அரைத்து பரந்த பழைய மண் பாத்திரத்தில் இட்டு நன்கு சூடாக்கி சூட்டோடு சூடாகக் கடிவாயில் பூச வேண்டும். இவ்விதம் மூன்று தினங்கள் காலையிலும் மாலையிலும் வெதுவெதுப்புடன் பூசிவர விஷத்தை முறித்துக் குணம் கிடைக்கும்.

மஞ்சளுக்கு விஷத்தை முறிக்கும் அற்புதமான சக்தியுண்டு என்பதை அனைவரும் அறிவோம். நல்ல சுத்தமான கறிமஞ்சளை எடுத்து அம்மியில் வைத்து நன்கு அரைத்து இதனுடன் போதிய சம அளவு பசுவின் சாணியையும் கலந்து மண் சட்டியில் இட்டு நன்கு சூடாக்கி கடிவாயில் சூட்டோடு சூடாகப் பூசிட விஷத்தை முறித்து விடும். புண்ணும் விரைவில் குணமாகும்.

நாட்டு மருந்தில் எதை அரைத்துப் பூசினாலும், அல்லது கஷாயமாகத் தயாரித்து உட்கொண்டாலும், எண்ணெய்யாகக் காய்ச்சித் தலையில் தேய்த்துக் குளித்தாலும் விஷத்தை முறிப்பதற்கு ஒரு வாரத்திற்கு உப்பு, புளி இவைகளை அறவே நீக்கிப் பத்திய உணவையே உண்டுவர வேண்டும்.

கடுகையும் மஞ்சளையும் நன்கு வடிய வடிய அரைத்துக் சிறுநீருடன் நன்கு கலக்கி பழைய மண்பாத்திரத்தில் விட்டு நன்கு சுடவைத்து நாய் கடித்த இடத்தில் பூசினால் விஷம் முறிந்துபோகும் இவ்விதம் தினம் இரண்டு வேளை வீதம் ஆறு தினங்கள் பூசிவந்தால் விஷம் முறிந்து குணம் கிடைக்கும்.

பாம்பு கடிக்கு மருந்து

"பாம்பு என்றால் படையும் நடுங்கும்" என்பார்கள். பாம்பு என்பது நல்ல பாப்பையே குறிக்கும். நல்ல பாம்பு கடித்தால் பிழைப்பது என்பது அரிதாகும். எனவேதான் பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்கிறார்கள்.

பாம்புகளில் எத்தனையோ வகையுண்டு. சாரைப் பாம்பு, தண்ணீர் பாம்பு, விரியன் பாம்பு, கொம்பேறி மூர்க்கன், கண்ணாடி விரியன், மண்ணுளிப் பாம்பு என்று விதம் விதமாகப் பாம்புகள் உள்ளன. தண்ணீர்ப் பாம்புக்கு விஷம

இல்லை என்கிறார்கள். மற்ற பாம்புகள் கடித்தால் விஷம் ஏறும். நல்ல பாம்பு கடித்தால் விஷத்தை இறக்குவதற்கு என்ன என்ன வழிமுறைகளைச் செய்ய வேண்டும் என்பதைப் பின்னர் பார்ப்போம்.

கொடிய விஷத்தை—கடித்தவுடனேயே தலைக்கேறுகின்ற விஷத்தையுடைய பாம்பை நல்ல பாம்பு என்கிறார்கள். இந்தக் கொடிய விஷத்தையுடைய பாம்பு தன்னிடம் விஷம் உள்ளதால் வெளியே வராது. வளைகளில்— பொந்துகளில்தான் காணப்படும். அதிகாலை வேளையிலும் மாலை வேளையிலும்தான் உணவுக்காக வெளியே வரும். இவ்விதம் உணவு தேடி வெளியே வரும்போது நாம்தான் சற்றுக் கவனமாக நடந்து கொள்ளவேண்டும். உணவுக்காக நல்ல பாம்பு அதிகாலை வேளையிலும் மாலைவேளையிலும் உலவுகின்றபோது நாம் குறுக்கிட்டால், தமது உணவை நாம் பறித்துக் கொள்ள முயலுவதாக எண்ணி நம்மை விரட்ட ஆரம்பிக்கும். எனவே, இந்த அதிகாலை வேளையிலும் கருகிருட்டு வேளையிலும், வயல்வெளிகளுக்குச் செல்லும்போதும், தோட்டங்களுக்குச் செல்லும் போதும் கையில் விளக்குடன் தான் செல்ல வேண்டும்.

நல்ல பாம்பு இருக்கும் வளையைப் பார்த்தால் இதன் அமைப்பானது விசித்திரமாக இருக்கும். வேனிற்காலத்தைத் தவிர மற்ற நேரத்தில் இது பெரும்பாலும் வளையினுள் தான் இருக்கும். வளையின் அமைப்பு பூமியின் சூடு தாங்காத

அளவில் இருக்கும். வேனிற்காலத்தில் பூமியின் சூட்டைத் தாங்கிக் கொண்டு வளையினுள் இருக்க முடியாது. எனவேதான் அடிக்கடி வெளியேவரும் மக்களின் கண்களில் தென்படும். விஷமுள்ள பாம்பு ஆனதினால் இதைக் கொல்ல முயலு வார்கள். நாம் இதற்குத் தொல்லை கொடுக்கா விட்டால் நம்மை ஒன்றுமே செய்யாது. இதைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் அடித்து விட்டுக் கொல்லாமல் மட்டும் விட்டுவிடக் கூடாது. நன்கு அறிவு படைத்த இந்தப் பாம்பு நாம் எங்குச் சென்றாலும் நம்மைத் தொடர்ந்து வந்து கடிக்க முயலும். எனவே, அடித்துவிட்டு உயிருடன் தப்பிச் செல்ல விடவே கூடாது. இது நம்மைக் கண்டு பயப்பட்டுச் செல்ல, நாம் இதைக் கண்டு பயந்து நடுங்குகிறோம்.

வீடுகளிலும் நல்ல பாம்பு வருவதற்கு வாய்ப்பு உண்டு. தேவையற்ற பொருட்களை அடைத்து வைப்பதன் மூலம் எலிகள் பெருவதற்கு நாம் வாய்ப்பு அளிக்கிறோம். இவ்விதம் எலிகள் பெருகி விட்டால் கண்டிப்பாக எலியின் வாடையை மோப்பம் பிடித்து வீட்டிற்கு வந்துவிடும். வீட்டின் சுற்றுப்புறம் செடிகொடிகள் அடர்ந்து காணப் படாமல் இருப்பது நல்லது.

தண்ணீர்ப் பாம்பையும் சாரைப் பாம்பையும் அடிக்கடி பார்த்திருப்போம். இவை, தம்மிடம் விஷம் இல்லாத காரணத்தால் சற்றுச் சுதந்திர மாகத் திரியும். கொம்பேறி மூர்க்கன் மரங்களின்

கிளைகளில் காணப்படும். இதுவும் கொடிய விஷமுள்ளதுதான். எவ்வளவு உயர்ந்த மரமாக இருந்தாலும் கூட தரையில் தன்னுடைய உணவு இருக்குமானால் தரையில் குதித்துவிடும்.

பச்சைப் பாம்பு மரத்தோடு மரமாக இலைகளுடன் மறைந்து கொண்டு வாழும். இது கண்களைக் கொத்திவிடும் என்பார்கள். கண்களைக் கொத்துவது எல்லாம் வீணான கற்பனைதான்.

வீட்டில் கோழி வளர்ப்பவர்கள் சற்றுக் கவனமாக இருக்க வேண்டும். கோழி கூடுகளைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். கோழிக்காரத்தின் வாடைக்கு நல்ல பாம்பு வருவதற்கு வாய்ப்பு உண்டு.

நல்ல பாம்பு நம்மைக் கண்டு பயந்து விரைந்து செல்லும் போது நாம் குறுக்கிட்டு, பயந்து அதன் மேல் விழ நேர்ந்தால் ஒருவேளை கடிக்கக் கூடும். இவ்விதம் நல்ல பாம்பு ஒருவரைக் கடித்துவிடும் போது பொய்க்கடி என்றும் கோபக்கடி என்றும் இரண்டுவிதமாக இதன் கடிகள் உண்டு. அதை மிதிக்கின்றபோது வேதனை தாங்காமல் பொய்யாகக் கடிக்கும். இவ்விதம் கடிக்கின்ற போது விஷம் ஏறாது.

உணவுக்காக அலைந்து கொண்டிருக்கும் போதோ அல்லது ஆண்,பெண் இனப்பெருக்கத்தின் போதோ அல்லது அதைத் தொல்லைப்படுத்தும் போதோ அதற்கு அதிகப்படியான சினத்தை

உண்டு பண்ணும்போதோ அது கடித்தால் விஷம் ஏறும். இவ்விதம் விஷப் பாம்பு—நல்ல பாம்பு ஒருவரைக் கடித்துவிட்டதென்றால் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

பாம்பு ஒருவரைக் கடித்துவிட்டால் அவர் தனியே இருந்தால் உடன் கைகால்களைப் பரக்கப் போட்டுவிட்டுத் தளர்ச்சியடைந்து விடக்கூடாது. கடிவாயின் மேல் கயிறு கொண்டு பலமாகக் கட்டி விடவேண்டும். கயிறு கிடைக்கவில்லை என்றால் உடுத்தியிருக்கும் வேஷ்டியைக் கிழித்தாவது கட்ட வேண்டும். பக்கத்தில் யாராவது இருந்தால் அவர் உடன் இவ்விதம் கடிவாய்க்கு மேல்பாகத்தில் பலமாகக் கட்டுப்போட்டு விட்டுக் கூர்மையான கத்தி அல்லது பிளேடு கொண்டு கடித்த இடத்தில் கீறி இரத்தத்தை வெளியே எடுக்கவேண்டும். வாய் வைத்து இரத்தத்தை உறிஞ்சி உமிழுகின்றவர் களுக்கு உதடுகளில் புண் இருக்கக்கூடாது. ஆகவே, முதலுதவியாக இவ்விதம் கடிவாய்க்கு மேல் கண்டிப்பாகக் கட்டுப்போட்டேயாக வேண்டும். இல்லையேல் விஷம் தலைக்கேறி இறக்க நேரிடும்.

முதலில் இவ்விதம் கட்டுப் போட்டுவிட்டு அதன் பிறகே மருத்துவமனை பக்கத்திலிருந்தால் எடுத்துச் சொல்லவேண்டும். மருத்துவமனையில் பாம்பு கடிக்கு நவீன மருந்துகள் உள்ளதால் குணப்படுத்தி விடுவார்கள். மருத்துவமனை பக்கத்தில் இல்லாதவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதை விரிவாகப் பார்ப்போம்.

ஒருவரைப் பாம்பு கடித்துவிட்டதென்றால் முதலில் கடிபட்டவர் பீதி அடைவது இயற்கை தான். அவர் கொஞ்சம் தைரியமாகச் செயல் பட்டால் மரணத்தைத் தவிர்க்கலாம். எந்தக் கொடிய பாம்பு விஷத்தையும் தன்னுடைய சிறுநீர் குணப்படுத்தும் ஆற்றலுண்டு. எனவே, அவர் தன்னுடைய சிறுநீரை அந்தக் குழப்பமான நேரத் தில் பருகுவாரானால் குணம் பெறுவார் என்பது உறுதியாகும்.

பக்கத்திலுள்ளவர்கள், கடிபட்டவரைப் பயப் படுத்தாமல் தைரியப்படுத்த வேண்டும். அடுத்து வாழை மரத்தை வெட்டிவந்து மேல்பட்டையை உரித்து எடுத்துவிட்டு உள்ளேயுள்ள பட்டை களையும் தண்டையும் நன்றாகக் குறுகத் தறித்துக் கல்லுரலில் இட்டு நன்றாக இடித்துச் சாறு பிழிந்து எடுத்து ஏறக்குறைய இருநூறு மில்லிச் சாற்றைக் குடிக்கச் செய்யவேண்டும்.

வாழை மரத்தின் பட்டைகளை உரித்துத் தரையில் பரப்பி முதலில் கிடத்திவிட வேண்டும். சாறு பிழிய நேரமானால் இவ்விதம் வாழைமரப் பட்டைகளில் கடியுண்டவரை கிடத்துவது நல்லது.

வாழைமரப் பட்டைகளின் சாறு நல்ல மருந் தாகும். நல்ல பாம்பின் கொடிய விஷத்தை முறிப் பதற்கும் குணப்படுத்துவதற்கும் இதை விடவும் சிறந்த மருந்து இல்லை என்றே கூறலாம்.

கறிமஞ்சளுக்கு எப்பேர்பட்ட விஷத்தையும் முறிக்கும் ஆற்றலுண்டு. முனை ஒடியாத மஞ்சளை அடுப்பில் இட்டு நன்கு சுட்டுத் திக்கங்குடன் கடிவாயில் வைத்து வைத்து எடுக்க விஷத்தை முறித்து குணம் பெறுவதற்கு உதவும்.

தும்பைச் செடிகள் நிறைய அளவில் வளர்ந்திருப்பதைக் காணலாம். தும்பை இலைகளைப் போதுமான அளவு பறித்து வந்து தண்ணீரில் இட்டு நன்கு கழுவி எடுத்து கல்லுரலில் இட்டு நன்கு இடித்துச் சாறு பிழிந்து எடுத்து ஏறக்குறைய 100 மில்லி சாற்றுடன் அதேயளவு சுத்தமான நல்லெண்ணெய்யும் கலந்து குடிக்கச் செய்ய வேண்டும்.

கொழுஞ்சி என்ற குற்றுச் செடி நிறைய அளவில் வளர்ந்திருப்பதைக் காணலாம். இந்தச் செடியின் இலைகளை ஆய்ந்து எடுத்துத் தண்ணீரில் இட்டு நன்கு கழுவி எடுத்த பின்னர் அம்மியில் வைத்து நன்கு நைய அரைத்து ஒரு எலுமிச்சப் பழத்தின் அளவு கொடுத்து விட்டால் விஷத்தை முறித்து விடலாம். விரைவில் குணம் கிடைக்கும்.

பெரியாநங்கை என்ற பச்சிலையை கிராமப் புறங்களில் காணக் கிடைக்கின்றது. இந்தப் பச்சிலையை நன்கு நைய அரைத்து சிறிதளவு கொடுத்து விட்டால் விஷம் இறங்க ஆரம்பித்து விடும்.

நல்ல செழிப்பான அறுகம்புல்லிற்கு எந்தக் கொடிய விஷத்தையும் முறித்துக் குணப்படுத்தும்

ஆற்றலுண்டு. நல்ல பாம்பும் கீரிப்பிள்ளையும் சண்டையிட்ட பின்னர் கீரிப்பிள்ளை ஒரு பச்சிலையை நாடிச் சென்று அதில் புரண்டு வரும் என்றும் இவ்விதம் புரண்டு வந்த பின்னர் கீரிப் பிள்ளையின் உடம்பிலிருந்து பாம்பு விஷம் இறங்கி விடும் என்றும் கூறப்படுகிறது.

இந்தப் பச்சிலை வேறு எதுவும் இல்லை. அறுகம்புல்லேதான். நல்லபாம்புக் கடிக்கு அறுகம் புல்லைப் போதிய அளவு கொண்டுவந்து நன்கு கழுவி எடுத்துத் தண்ணீர் சிறிது விட்டு கல்லுரலில் இட்டு நன்கு இடித்துச் சாறு பிழிந்து ஏறக்குறைய நூறு மில்லியளவு இந்தச் சாற்றை உள்ளே கொடுத்து விட்டால் பாம்பின் விஷத்தைச் சிறிது நேரத்தில் முறித்துவிடும்.

எட்டி மரத்தின் பட்டைக்கும் பாம்பின் விஷத்தை முறிக்கும் ஆற்றலுண்டு. இந்தப் பட்டையை நன்கு சிதைத்து மைபோல் அரைத்து ஒரு நெல்லிக்காயளவு உள்ளுக்குக் கொடுக்க விஷத்தை முறித்துக் குணம் கிடைக்கும். நல்ல பாம்பின் கொடிய விஷத்தை முறித்துக் குணப் படுத்தும் அற்புத சக்தியை எட்டி மரத்தின் பட்டை பெற்றிருக்கிறது.

மயில் பீலிக்கு நல்ல பாம்பின் கொடிய விஷத்தை முறித்துக் குணப்படுத்தும் சக்தியுண்டு. இந்த மயில் பீலியை ஒரு காகிதத்தில் வைத்துச் சுருட்டி சிகரெட் போன்று புகைத்தால் இந்தப் புகையானது விஷத்தை முறித்துவிடும்.

ஆடு தீண்டாப்பாளை என்ற செடியானது வேலியோரங்களில் வளர்ந்து நிற்பதைப் பார்க்கலாம். இந்தச் செடியின் இலைகளைப் பறித்துவந்து நன்கு சுத்தம் செய்து, நன்கு அரைத்து ஒரு நெல்லிக்காயின் அளவு உள்ளே கொடுத்துவிட வேண்டும். இது விஷத்தை முறித்துக் குணத்தைத் தரும்.

எருக்கம் செடியின் தளிர் இலைகளைப் பறித்து வந்து பாலைப் போக்கி பாம்பு கடித்தவர்களை உண்ணச் செய்யவேண்டும். எருக்கம் செடியின் இலைகளுக்கு பாம்பின் விஷத்தை முறித்து குணப் படுத்தும் ஆற்றல் உண்டு.

கொஞ்சம் சிகைக்காயை எடுத்து விதைகளை நீக்கிவிட்டுச் சிதைத்து தண்ணீரில் இட்டு நன்கு கொதிக்க வைக்கவேண்டும். கொதிக்கின்றபோது சிறிது நேரத்தில் நுரை ஏற்படும். பின்னர் இறக்கி வைத்து நுரையுடன் கூடிய தண்ணீரைக் குடிக்கச் செய்யவேண்டும். இவ்விதம் சிறுகச் சிறுகக் குடிக்க வாந்தி வர ஆரம்பிக்கும். வாந்தியுடன் பாம்பின் விஷமும் வெளியேறும்.

சிறியா நங்கைச் செடியின் இலையைக் கொண்டு வந்து நன்கு அரைத்துச் சிறிதளவு உள்ளே கொடுத்து விட்டால் விஷம் முறியும். கடிவாயில் வைத்துக் கட்டினால் விஷம் இறங்கும்.

கீழா நெல்லிச் செடியின் இலையும் காய்களும் விஷத்தைப் போக்கும் அற்புதமான மருந்தாகும்.

எனவே கீழா நெல்லிச் செடியின் இலை, காய்கள் இவற்றை மிளகுடன் சேர்த்து நன்கு அரைத்து ஒரு நெல்லிக்காயினளவு உள்ளுக்குக் கொடுக்க விஷத்தை முறித்துவிடும். அற்புதமான முறையில் குணம் கிடைக்கும்.

தலைச்சுருளி என்னும் கொடியானது வேலி களில் படர்ந்து காணப்படும். இது விஷமுறிவுக்குக் கைகண்ட மருந்தாகும். இதன் வேருடன் குப்பை மேனிச் செடி வேர், நீலிவேர், மிளகு இவைகளை நன்றாக அரைத்து ஒரு நெல்லிக்காயினளவு தினமும் இரண்டு வேளை வீதம் மூன்று தினங்கள் சாப்பிட்டு வந்தால் குணம் கிடைக்கும்.

தலைச் சுருளியின் வேர், வாகை மரத்தின் பட்டை, வீழி பழம் இவைக்ளை ஏறக்குறைய ஓரளவு எடுத்து அம்மியில் வைத்து நன்கு வெண்ணெய் போன்று அரைத்து நெல்லிக்காய் அளவு மூன்று தினங்கள்—ஆறு வேளை உட் கொண்டு வந்தால் நல்ல பாம்பின் கொடிய விஷத்தை முறித்து விடலாம்.